Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினப்பதிப்பு தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 23 திங்கட்கிழமை (07.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 279

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## கவர்ச்சியான அறிக்கையை விடுத்து அரசுடன் பேச வேண்டும் கூட்டமைப்பு

### அழைப்பு விடுக்கிறார் அமைச்சர் நிமால்

(கொழும்பு)

கவர்ச்சியான அறிக்கைகள் வெளியிடுவதனை விடுத்து தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கத்துடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரது உரைகளும், அறிக்கைகளும் மக்களைக் கவரும் வகையில் கவர்ச்சியாகத்தான் உள்ளன. அதனால் பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை.

அரசாங்கம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தயாராகவும், ஆர்வமுமாகவே உள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மற்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் தீர்வு விடயத்தில் உண்மையிலேயே விசுவாசமாகவும், ஆர்வமாகவும் இருப்பது தெரிகிறது.

19 பக்கம் பார்க்க...

## காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்றைய தினமும் சாட்சியப் பதிவு

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவில் காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் 27 பேர் நேற்று தங்கள் சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக பிரிவில் சாட்சியமளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் 60 பேர் அழைக்கப்பட்டு அதில் 25 பேர் சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தனர்.

நேற்றுத் தொடர்ந்த சாட்சியமளிக்கும் நிகழ்விற்கு 61 பேர் அழைக்கப்பட்டு அவர்களில் 27பேர் தங்கள் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். அத்துடன் மேலும் 85பேர் புதிதாகப் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

இரண்டு நாட்களில் சாட்சியமளிக்க முடியாமற் போனோர் மற்றும் புதிதாகச் சாட்சியமளிக்க பதிவு செய்தோருக்கான சாட்சியமளிக்கும் ஏற்பாடுகள் செய்வது தொடர்பாக கொழும்பு சென்று முடிவெடுக்கப்பட்டு, அவர்களுக்கு அறிவிப்பதாக ஆணைக்குழு தெரிவித்தது.

இதேவேளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது கணவரை காணாமற்போனவர் என அடையாளப்படுத்த வேண்டாம் என முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் ஒருவர் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆணைக்குழுவின் நேற்

19 பக்கம் பார்க்க...

# இலங்கையின் தேசியப் பிரச்சினை தீர்வு அழுத்தம் தரமாட்டாது தென்னாபிரிக்கா

### அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தென்னாபிரிக்கா எவருக்கும் அழுத்தம் கொடுக்கமாட்டாதென அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராகிம் இஸ்மாயில் இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் போரின் போது இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் மீறல்கள் தொடர்பாக, விசாரிக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையை தனியான விவகாரமாக - தனியான அமைப்பாகவே தென்னாபிரிக்கா பார்க்கிறது.

பிரதி அதிபர் சிறில் ரமபோசா தலைமையில் இன்று கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்கக்குழு, இலங்கையில் என்ன நடக்கிறது, இலங்கை எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்ன என்பதிலேயே பிரதானமான கவனத்தைச் செலுத்தும்.

தேசியப் பிரச்சினை குறித்தும் இந்தக் குழுவினர் ஆராயவுள்ளதுடன், அமெரிக்கத் தீர்மானம் குறித்தும் கலந்துரையாடவுள்ளனர்.

இந்த இரண்டு நாள் பயணத்தின் போது, தேசியப் பிரச்சினை தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரையும் சந்தித்து பேசவுள்ளோம்.

பிரதி அதிபர் ரமபோசா இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இது.

19 பக்கம் பார்க்க...

## இராணுவத்திற்கு சுவீகரிக்கவுள்ள 6348 ஏக்கர் காணியை வழங்க முடியாது

### செட்டிகுள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவ தேவைக்காக சுவீகரிக்க கோரியுள்ள 6,348 ஏக்கர் காணியையும் வழங்க முடியாது என செட்டிகுளம் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சரும், வன்னி அபிவிருத்திக்குழுத் தலைவருமான றிசாட் பதியுதீன் தலைமையில் இடம்பெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது செட்டிகுளம் பிரதேச மக்களின் காணிகள் உள்ளடங்கலாக 6 ஆயிரத்து 348 ஏக்கர் காணியை இராணுவத் தேவைக்காக வழங்கு

19 பக்கம் பார்க்க...

## வாள் வெட்டுக் கொலை மீசாலை வாசிகள் கைது

யாழ்.சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மூவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் அல்லாரையைச் சேர்ந்த என்.அன்பழகன் (வயது-26) என்பவர் உயிரிழந்ததுடன், மேலும் 8 பேர் படுகாயமடைந்து சாவகச்சேரி மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டனர்.

மீசாலையில் ஆலய திருவிழாவொன்றில் நேற்று முன்தினம் மாலை இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற கைகலப்பின் எதிரொலியாகவே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மீசாலையினைச் சேர்ந்த 3 பேரை கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாட்சியமளிப்பவர்களை தண்டிக்காது இலங்கை

### பிரிட்டன் நம்பிக்கை

ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் நபர்கள், இலங்கை அரசாங்கத்தினால் தண்டிக்கப்படவோ அல்லது துன்புறுத்தப்படவோ மாட்டார்கள் என பிரித்தானியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளில இலங்கை பங்கேற்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என இலங்கைக்கான பிரித்தா

19 பக்கம் பார்க்க...

## உள்ளக விசாரணைப் பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும் இலங்கை

### மீளவும் வலியுறுத்துகிறது ஐ.நா.



உள்ளக விசாரணைப் பொறிமுறைகளை இலங்கை அரசாங்கம் மேலும் வலுப்படுத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சா... பர்ஹான் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்கு மதி... பளிக்கக் கூடிய வகையிலா... விசாரணைப் பொறி முறை... ஒன்றின் அவசியம் எழுந்துள்... தாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்த... தின் பின்னரான சவால்க... மற்றும் அழுத்தங்களை ஐ...

19 பக்கம் பார்க்க...

## ஐ.நா. விசாரணையில் பாகிஸ்தான் தலையீட்டை மேற்கொள்ள முடியாது

### அஸ்மா ஜஹாங்கீர் தெரிவிப்பு

இலங்கையில் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மீறல்கள் தொடர்பான விசாரணையில், பாகிஸ் தானிய அரசாங்கம் தன்மீது எத்தகைய தலையீடுகளையும் மேற்கொள்ள முடியாது என அந்நாட்டைச் சேர்ந்த, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை நியமித்துள்ள மூன்று நிபுணர்களில் ஒருவரான அஸ்மா ஜஹாங்கீர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான ஐ.நா.

19 பக்கம் பார்க்க...

உள்ளே
க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான
அளவையியலும் விஞ்ஞானமுறையும்
பரீட்சை வினாத்தாள்

# அண்மைக்கால விபத்துக்களின் மூலம் அனுமதிக்கப்படுவோரின் தொகை அதிகரிப்பு

## வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு



(வவுனியா)

வவுனியாவில் அண்மைக் காலமாக விபத்துக்களின் மூலம் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவோரின் தொகை அதிகரித்துள்ளது. எனவே பொலிஸார் இது தொடர்பில் கூடிய கவனமெடுக்க வேண்டும் என வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு. அகிலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் தற்போது இடம்பெற்று வரும் விபத்துக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் அண்மைக்காலமாக விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமை எமது வைத்தியசாலை பதிவுகளின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்படும் விபத்துக்கள் சாரதிகளின் கவனக்குறைவே காரணமாக உள்ளது. குறிப்பாக கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நொச்சிமோட்டையில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உட்பட மேலும் ஒரு ஆண் பலியாகியிருந்தார். இதற்கு அதிவேகமாக வாகனம் ஓட்டப்பட்டமை என்பது அறியப்படுகிறது.

இதேவேளை, ஓமந்தை விளக்குவைத்தகுளம் பகுதியில் மிக மோசமான முறையில் தனியார் பேருந்து தடம்புரண்டதில் ஒருவர் பலியானதுடன் 23 பேர் காயமடைந்துள்ளனர். இதற்கும் அதிவேகமாக வாகனம் செலுத்தப்பட்டமையே என அறியப்படுகிறது.

இவை மட்டுமன்றி எமது வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவில் தினமும் பலர் விபத்துக்களால் அனுமதிக்கப்பட்ட வண்ணமுள்ளனர். இவர்களில் அதிகமானோர் மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிக்கியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் சாரதிகள் வாகனம் செலுத்தும்போது வீதி சமிக்ஞைகளில் கவனம் செலுத்தவேண்டும்.

போக்குவரத்துப் பொலிஸார் நிற்கும் இடங்களில் மாத்திரம் சீரான வாகனம் செலுத்துவது போன்ற பாசாங்கையும் ஏனைய இடங்களில் மோசமாக வாகன செலுத்துகைகளையும் கைக்கொள்வதாலேயே இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே சாரதிகள் விபத்துக்கள் தொடர்பில் தாமாக உணரா விட்டால் விபத்துக்களை கட்டுப்படுத்த முடியாது போய் வீணாண உயிரிழப்புக்களை சந்திக்க நேரிடும்.

இத்துடன் பொலிஸாரும் வாகன சாரதிகளின் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளமை இவ்வாறான விபத்துக்கள் மூலம் புலப்படுகின்றது. சாரதிகள் வாகனம் செலுத்தும் போதே கையடக்க தொலைபேசிகளில் உரையாடுவது, பாடல்களை அதிக சத்தத்துடன் ஒலிக்கச் செய்வது, அதிவேகமான ஓட்டம் என்பன தொடர்பில் பொலிஸார் தற்போதுள்ளதை விட கூடிய கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# கடல்வாழ் உயிரினம் தாக்குதல்; மீனவர் ஒருவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியில் மீனவர் ஒருவர் கடல் வாழ் உயிரினம் ஒன்றின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். ராஜ்குரூஸ் வெலிங்டன் (வயது - 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை மன்னார் பனங்கட்டுக்கொட்டுவைச் சேர்ந்த 5 மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர். இவர்களில் இருவர் கடலில் இறங்கி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது சொறி என மீனவர்களால் அழைக்கப்படும் ஒரு வகை கடல் வாழ் உயிரினம் குறித்த இரண்டு மீனவர்களையும் கடித்துள்ளது. இதனால் உடல் அரிப்புக்கு உள்ளான மீனவர்கள் உடனே படகில் ஏறி கரைசேர்ந்தனர். இவர்களில் ஒருவர் கடலுக்குள்ளேயே மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் இருவரும் எருக்கலம்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் ஒருவர் கடலுக்குள்ளேயே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. மற்றையவர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மதுப்பிரியர்களின் அடாவடி மகிழடியில் அதிகரிப்பு

மட்டுவில் மத்தி மகிழடிப் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மகிழடிப் பகுதியில் உள்ள கள்ளுத்தவறணைக்கு வரும் சில மோசமான மதுப்பிரியர்கள் மகிழடி வீதி மற்றும் மணல் வீதியில் தமது அடாவடியைக் காட்டுகின்றனர்.

இவ்வீதிகளில் போதையில் தமது வீரத்தைக் காட்டும் வசனங்களும் விரும்பத்தகாத வசனங்களும் பேசுவதால் அமைதிச் சூழலில் கல்விகற்கும் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்படுவதாகவும் இவர்களின் அட்டகாசத்தை தாங்கமுடியாத நாய்கள் குரைத்து ஆரவாரிப்பதால் பெரும மன உளைச்சலுக்கு ஆளாவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது விடயம் தொடர்பில் உரியவர்கள் கவனம் எடுத்து இம் மதுப்பிரியர்களின் அடாவடியை தடுக்க வேண்டும் எனவும் கோருகின்றனர். (இ)


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : நி. நிஷான்

முகவரி : மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

அகவை 1 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




# பிரதேச சபை செயலாளர் பதவிக்கு விரைவில் நியமனம்

வெற்றிடமுள்ள பிரதேச் சபை செயலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றுள்ளது.

புதிய செயலாளர்கள் சுன்னாகம் பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேச சபை, துணுக்காய் பிரதேச சபை, நெடுங்கேணி பிரதேச சபை ஆகிய ஐந்து சபைகளுக்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி நியமனக் கடிதங்களை இவ்வாரம் வழங்குவார் என மாகாண அலுவலக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு மாதகாலமாக சில சபைகளுக்கு செயல்ளாளர் இன்றி வந்த நிலைமையை அடுத்து வடமாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு செயலாளரினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு உள்ளூராட்சி சேவையில் அனுபவம் உடையவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை கடந்த சனிக்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இறுதிக்கட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவான 5 பேருக்கு இவ்வாரம் புதிய செயலாளர் நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

# கீரிமலை - மாவிட்டபுரம் வீதிக்கு மின் விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை - மாவிட்டபுரம் பிரதான வீதிக்கான மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட இவ்வீதியில் இரவில் பயணிப்போரும், வாகனச் சாரதிகளும் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது இப்பகுதிக்கான மின் விளக்குகள் தருவிக்கப்பட்டு பொருத்தப்பட்டு வருகின்றன.

மூன்று கிலோமீற்றர் தூரம் கொண்ட பிரதான வீதிக்கு இதுவரைகாலமும் மின்விளக்கு பொருத்துவதில் இழுபறி நிலை காணப்பட்டு வந்ததுடன் தற்போது மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் இடம்பெற்று வருகின்ற நிலையில் இம்மின் விளக்குகள் ஒளிர்வதன் மூலம் பயணிப்போர் சிரமங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பச்சை மிளகாய்க்கு யாழில் கடும் கிராக்கி

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ். குடாநாட்டில் மரக்கறிகளின் விலை சூடுபிடித்துள்ள நிலையில் பச்சை மிளகாய்க்கான கிராக்கி அதிகரித்துள்ளது.

குடாநாட்டு சந்தைகளில் பச்சை மிளகாயை காண்பதே அரிதாகவுள்ளது. ஒரு கிலோ 600 - 700 ரூபா வரையில் விற்கப்படுகிறது. பருவமடையாது பிஞ்சாகவே இவை சந்தைக்கு வருகின்றன.

இதேவேளை இஞ்சிக்கான விலையும் அதிகரித்துள்ளது. கிலோ ஒன்று 800 - 900 ரூபா வரையில் சந்தைகளில் விற்பனையாகிறது. (இ)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2543 திகதி 05-07-2014

ஆங்கில எழுத்து: Z

வெற்றி எண்கள்: 03 19 38 40

போனஸ் இல: 35

ஜக்பொட் பரிசு ரூ.15,177,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 207911 | 20/- | 4,158,220/- |
| 2 இல | 14926 | 100/- | 1,492,600/- |
| 3 இல | 327 | 1,000/- | 327,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இல + ஆங்கில எழுத்திற்கும் | 8377 | 40/- | 335,080/- |
| இல + ஆங்கில எழுத்திற்கும் | 583 | 1,000/- | 583,000/- |
| இல + ஆங்கில எழுத்திற்கும் | 7 | 10,000/- | 70,000/- |
| இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,177,975/- | - |
| இல + போனஸ் இல | 9885 | 100/- | 988,500/- |
| 2 இல + போனஸ் இல | 460 | 500/- | 230,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 409 | 200/- | 81,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 242914 | | 9,702,200/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.07.09 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 15,745,400/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02. தொ.பே: 2333546/7

(C/3732)



## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088. (C/3723)

### வீடு விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற் போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. அரச ஊழியர், வங்கி, ஊழியர், பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவறட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு. (R/355)

# வணிகர்களைப் பாதுகாக்கும் வகையில் சுற்றுநிருபம் வெளியிட ஏற்பாடு

## யாழ்.வணிகர்கழகத்தின் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி நிறுவனங்கள் தமது பொருட்களை முகவர்கள் ஊடாக யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்துவதுடன் யாழ்வணிகர்களைப் பாதுகாக்கும் வகையில் யாழ்.வணிகர் கழகத்தினால் விரைவில் சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்படவுள்ளதாக யாழ்வணிகர் கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயகேசரம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.வணிகர் கழகத்தில் நடைபெற்ற யாழ். வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தென்பகுதி நிறுவனங்களின் முகவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்பகுதி நிறுவனங்களின் பொருட்களை விநியோகம் செய்யும் முகவர்களுக்கும் யாழ்.வணிகர்களுக்கும் இடையிலான பொருள் விநியோக ஒப்பந்தம் தொடர்பில் வர்த்தகர்களிடம் தெளிவற்ற நிலை ஒன்று காணப்படுகின்றது. அத்துடன் பொருட்களை அதிகளவில் வர்த்தகர்கள் கொள்வனவு செய்வதனால் முழுவதையும் விற்பனை செய்யமுடியாது நஷ்டமடைகின்றனர்.

மேலும் பொருட்களைச் சந்தைப்படுத்தும் நிறுவனங்களின் முன்னேறும் தந்திரோபாய முறையும் வர்த்தகர்களின் புரிந்து கொள்ளாத் தன்மை காரணமாகவே யாழ்.வணிகர் கழகம் சுற்று நிருபம் ஒன்றை விநியோகம் செய்து இரு தரப்பினருக்கும் விநியோகிக்கவுள்ளதுடன் அதற்கு இணங்க வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம், உட்பட வணிகர் கழகத்தின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (பா, 25)

# இந்துபோர்ட் இராசரத்தினத்தின் 130 ஆவது பிறந்தநாளி விழா



(திருநெல்வேலி)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் அதன் நிறுவுனர் இந்து போர்ட் சு.இராசர்த்தினத்தின் 130 ஆவது பிறந்தநாள் விழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சங்கத்தின் ஆராதனை மண்டபத்தில் சங்கத் தலைவர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக சு.இராசத்தினத்தின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து விருந்தினர்கள் அனைவரும் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்புரை, தலைமையுரையைத் தொடர்ந்து இல்ல மாணவிகளினால் புஷ்பாஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் சைவசமயிகள் எதிர்நோக்கும் சவால்கள், என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

இல்ல மாணவிகளின் நடனம், பாட்டு ஆகிய நிகழ்வுகளும் இடம் பெற்றன. செயலாளர் தி.செல்வமனோகரன் நன்றியுரை நல்கினார். (137)

# விண்ணப்பம் கோரல்

அறநெறிப் பாடசாலை இந்து சமய இறுதிப் பரீட்சை 2014 செப்ரெம்பர் மாதம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இலங்கை பூராகவும் நடாத்தப்படவுள்ளது. இப் பரீட்சை தமிழ் மொழியில் மட்டும் நடைபெறும். இந்து சமய கலாசார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட இந்து அறநெறிப்பாடசாலையில் பயிலும் மேற்பிரிவு மாணவர்களுக்கானதாகும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி ஆகும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள்கிளை. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# தடைப்படவிருந்த மஹோற்சவத்தை நடாத்த உதவினார் பிரதேசசெயலர்

கல்வியங்காடு, இலங்கைநாயகி அம்மன் கோவிலின் பூசை மற்றும் மஹோற்சவங்களை நடாத்துவதில் ஆலய தர்மகர்த்தாவின் இரண்டு ஆண் பிள்ளைகளிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஆலய மஹோற்சவம் தடைப்படுவதை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலையிட்டுத் தீர்த்து வைத்துள்ளார்.

அம்மன் ஆலய இவ்வருட மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் ஆலய பூசகரின் இரண்டு மகன்மாரிடையேயும் ஆலய நிர்வாகம் சம்பந்தமாகப்பிணக்கு ஏற்பட்டது.

இது சம்பந்தமாக, கோப்பாய் பொலிஸ் நிலையம், மத்தியஸ்தர் சபை ஆகியவற்றுக்கு இவ்விடயம் எடுத்துச் செல்லப்பட்டதுடன், நல்லூர் பிரதேச செயலகத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.

பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் ஆலயத்திற்குச் சமுகமளித்து தர்மகர்த்தா, அவரது பிள்ளைகள் மற்றும் பொதுமக்களை அழைத்துக் கலந்துரையாடி மஹோற்சவம் நடைபெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆலயத்தின் பூட்டப்பட்டிருந்த சில பகுதிகளின் திறப்புக்களையும் பெற்று ஆலய தர்மகர்த்தாவிடம் ஒப்படைத்தார்.

பிற்பகல் 3 மணியிலிருந்து இரவு 7 மணிவரை சிரமம் எதுவும் பாராது அனைவரோடும் இணைந்து செயற்பட்டு மஹோற்சவம் சுமுகமாக நடைபெறுவதற்கு உதவிய பிரதேச செயலரின் செயற்பாட்டை ஊர்மக்கள் அனைவரும் பாராட்டியுள்ளனர். (137)

# மகிந்தருக்குப் பிறகு ஆர்?




எனக்குச் சில நாட்களாக ஒரு கேள்வி தலையைக் குடைஞ்சு கொண்டிருக்கு. சிலவேளை இந்தக் கேள்வி உங்கட தலையுக்குள்ளையும் கூடு கட்டியிருக்கலாம்.

மகிந்தருக்குப் பிறகு ஆட்சியில இருக்கப்போறது ஆர்?

இந்தக் கேள்வி சிலவேளை மகிந்தற்றை மண்டையையும் குடைஞ்சு கொண்டிருக்கும்.

இல்லாட்டிக்கும் எப்பிடியும் ராஜபக்ஸ அன் பிரதேர்ஸ்க்கோ ராஜபக்ஸ அன்ட் சன்ஸ்க்கோ, ராஜபக்ஸ கொம்பனிக்கோ குடைஞ்சு கொண்டுதானிக்கும்.

ஏனென்டால்... இலங்கையின்ரை அரசியல் தலைவிதி இப்ப மகிந்தற்றை கையில–யோ காலுக்குள்ளையோதான் இருக்கு.

இதைத் தங்கட கையில எடுக்கக்கூடிய ஆள் ஆர்? இந்தப் பந்தைத் தன்ரை காலுக்குள்ள கொண்டுவந்து ஆடப்போகிற தலை எது? எண்டது சாதாரணமான ஒரு விசயமில்லை.

ஏனெண்டால், மகிந்தர் நல்ல பலமான அடித்தளத்தில குந்திக்கொண்டிருக்கிறார். அப்பிடிக் குந்திக்கொண்டிருந்துதான் பெரிய விளையாட்டையெல்லாம் காட்டிறார் எண்டு அவற்றை எதிராளிகள் எல்லாம் வயிறு பொருமிக்கொண்டிருக்கினம்.

அவரை அந்தத் தளத்தில இருந்து கிளப்பக்கூடிய ஆளோ, அம்போ, சேனையோ வெளி யில இப்போதைக்கு இருக்கிறமாதிரித் தெரியேல்ல. வெறும் வயிற்றுப்பொருமல்தான் எல்லாருக்கும்.

சில வேளை வெளியில இருக்கிற சக்திகள் மகிந்தற்றை தலையை உருட்டலாம் அல்லது காலை வாரலாம். இப்பிடியான ஒரு நப்பாசையிலதான் ரணில் தொடக்கம் தமிழ்க்கூட்டமைப்பு வரை வெளியில இருக்கிற பேய் பிசாசுகள் எல்லாத்துக்கும் மடை வைக்கிறதும் குழை அடிக்கிறதும் நடக்கிது.

ஏனெண்டால் உள்நாட்டில மற்றவையை விட ஆள் பலமாகத்தான் இருக்கிறார்.

இதாலதான் இந்தக் கேள்வி எல்லாற்றை தலையுக்குள்ளயும் ஒரு கருங்குளவியைப் போல கிறுகிறுத்துக்கொண்டிருக்கு.

இந்தக் கேள்விதான் இப்ப சிங்களச் சனத்திட்டயும் இருக்கெண்டு என்ரை சகபாடியான பொலிஸ்காரர் ஒருத்தர் சொல்லிறார்.

இந்தப் பொலிஸ்காரரும் ஒரு அம்பாந்தோட்டைக்காரர்தான். அம்பாந்தோட்டை ஆக்களுக்கே இப்பிடியான ஒரு கேள்வி பிறந்திருக்கெண்டால்...

இந்தக் கேள்வி இப்ப நாடு முழுக்க உள்ள கேள்விதான்.

இலங்கைக்கு வெளியில இந்தியாவில, அமெரிக்காவில, சீனாவில, பிரித்தானியாவில எண்டு இண்டைக்கு உலகம் முழுவதும் உள்ள ஏராளம் கேள்விகளில இந்தக் கேள்வியும் ஒண்டு.

அப்பிடியெண்டால் மகிந்தருக்குப் பிறகு ஆர் ஆட்சியிலிருப்பார்?

அந்த ஆட்சி எப்பிடியிருக்கும்?

அதில தமிழ் மக்களின்ரை நிலைமை என்னமாதிரி இருக்கும்?

தமிழ் முஸ்லிம் மக்களுடைய கொண்டாட்டமும் கூடி வாழிற வாழ்க்கையும் எப்படிமாறும்?

இலங்கை எப்பிடியான நிலையில இருக்கும்?

பார்த்தியளா? ஒரு கேள்வியைக் கேட்கப்போக இப்பிடி ஆயிரம் கேள்விகள் முளைக்கிது.

மகிந்தரை நீக்கினால் இல்லாட்டி மகிந்தர் விலகினால் என்ன நடக்கும் எண்டு சரியாகச் சொல்ல முடியேல்லை எண்டாலும் ஒண்டை மட்டும் உறுதியாகச் சொல்லலாம்.

மகிந்தர் போனால் என்ன? இருந்தால் என்ன?

மகிந்தருக்குப் பிறகு எந்தக் கொம்பன் வந்தாலும் பெரிய மாற்றம் ஒண்டும் வந்திடப்போறதில்லை.

அப்பிடியான ஒரு மாற்றமோ அதியற்புதமோ நடக்கிறதாக இருந்தால்... இதுக்கு முந்திப் பல தலைகள் மாறியிருக்குதுகள். அப்ப எல்லாம் மாற்றங்கள் வந்திருக்கோணுமே...!

அப்பிடி ஏதேனும் நடந்திதா?

ஒண்டும் நடக்கேல்லயே! ஏனெண்டால், எல்லாம் ஒரு குட்டையில் ஊறின மட்டைகள்தான். எல்லாப் பேய்களும் இனவாதப்பேய்கள்தான். எண்டபடியால எது இருந்தாலும் ஒண்டுதான்.

இதுக்குள்ளதான் நாங்கள் அரசியலையும் செய்யோணும். எங்கட வாழ்க்கைய கொண்டு போகோணும்.

இந்த நிலைமையில மகிந்தருக்குப் பிறகு ஆர் எண்டதை விட்டுப்போட்டு, மகிந்த வைச்சு எப்பிடிக் காரியம் சாதிக்கலாம், ஆளை எப்பிடி வெட்டியாடலாம் எண்டு பாக்கோணும்.

அரசியல் எண்டிறது வாயால வெட்டிக்கிழிக்கிற சங்கதியோ மையில்லாத பேனை எழுதித்தள்ளிற புழுகு மூட்டையோ இல்லை.

அது விசயங்களைச் சரியாகக் கையாளத் தெரிஞ்ச ஒரு கலை. அந்தக் கலை கைந்தால் பிறகென்ன?

உழுகிற மாடு உள்ளூரிலயே

முட்டாள்கள் செய்யும் ஒரே புத்திசாலித்தனம் காதல். புத்திசாலிகள் செய்யும் ஒரே முட்டாள்தனம் காதல். - ஜார்ஜ் பெர்னாட்ஷா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## உணவைக் குறை, பிரச்சினையில்லை!

மனிதர்கள் பழக்கத்திற்கு அடிமையானவர்கள். குடி, சிகரெட் என்று தீய பழக்கங்கள் மட்டும் அவனை அடிமைப் படுத்துவதில்லை. நல்ல பழக்கங்கள், நல்லதோ தீயதோ ஏதென்று தெரியாத பழக்கங்கள் போன்றவற்றையும் கூட தொடர்ந்து செய்து வந்துவிட்டால் அதை நிறுத்த முடியாமல் செய்துகொண்டிருப்பது மனிதர் வழக்கம்.

நம் சிந்தனையும் அப்படித்தான். பழகிய சிந்தனைகள் நம்பிக்கைகளிலிருந்தும் மீள முடியாமல் பெரும்பாலும் அதற்குள் வட்டமடித்தே வாழ்ந்து முடித்துவிடுகிறோம். நாம் சிந்திக்கும் தடத்தை மாற்ற முடிவதில்லை அல்லது மாற்ற விரும்புவதில்லை.

பழகிய பாதையிலேயே போய்க்கொண்டிருப்போம். புதிய பாதைகளில் திரும்பி நடப்பவர்களைப் பார்த்தாலே நமக்கு ஒவ்வாமைதான் வருகிறது.

பழகியதிலிருந்து நம்மால் மீள முடிவதில்லை. நம் உணவுப் பழக்கம் கூட அப்படித்தான். காலை, மதியம், இரவு என்று மூன்று வேளை சாப்பிடுவதென்று பழக்கப்பட்டிருக்கிறோம்.

பழக்கப்பட்டதாலேயே அந்தந்த நேரத்திற்குப் பசியெடுப்பதும் பழக்கமாகிவிட்டது. இதற்கும் ஆய்வு நடத்தி விட்டார்கள். இப்படித்தான் சாப்பிட வேண்டும் என்ற எந்த ஒரு கட்டாயமும் மனிதருக்கில்லை என்கிறது அந்த ஆராய்ச்சி.

"உயிர் வாழ வேண்டுமானால் தினமும் மூன்று வேளை சாப்பிட வேண்டும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அப்படி எந்த அவசியமும் கிடையாது; மூன்று வேளை சாப்பிட்டு பழகி விட்டோம், அவ்வளவுதான்" என்று இதுபற்றி ஆய்வு செய்த அந்த விஞ்ஞானி கூறுகிறார்.

பிறகு எத்தனை வேளை சாப்பிட வேண்டும்? எத்தனை முறை என்ற கணக்கெல்லாம் இல்லை. எவ்வளவு குறைவாக சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கு நல்லது என்கிறார் மைக்கல் மோஸ்லி என்ற இந்த விஞ்ஞானி. அவர் சொல்கிற காரணங்கள் மறுக்கக்கூடியதாக இல்லை.

உடல் உறுப்புகள் செயற்பட சக்தி தேவை. அதை வழங்குவது நாம் சாப்பிடும் உணவு. அதில் மாப்பொருள், புரதம், கொழுப்பு ஆகியவை இருக்கின்றன. உணவு சமிபாடடையும் போது இந்த சத்துக்கள் உடலின் இயக்கத்துக்கு எரிசக்தியாக மாறுகிறது. அதிகமான சத்துக்கள் கிடைக்கும்போது உடலில் பல பிரச்சினைகள் உண்டாகின்றன என்கிறார் மோஸ்லி.

நிறைய சாப்பிடும்போது கலோரிகள் அதிகமாகும். உடலின் தேவைக்கு மேலதிகமான கலோரிகள் கொழுப்பாக மாறி உடலில் தங்கி தீங்கு விளைவிக்கும்.

கலோரிகள் குறைந்த உணவு வகைகளை சாப்பிடும் அமெரிக்கர்களும் ஜப்பானியர்களும் மற்றவர்களைவிட அதிக காலம் உயிர் வாழ்வதன் இரகசியம் இதுதான் என்கிறார் அவர்.

உடல் உழைப்பு மற்றும் உடற்பயிற்சி இல்லாதவர்களுக்கு ...வைக்கு மீறிய உணவால் வரக்கூடிய ஆபத்து அதிகம். ...டுப்பதாக நினைத்துக் கொண்டு மூன்று வேளையும் சாப் ...வர்கள் அந்தப் பழக்கத்தில் இருந்து வெளியே வரவேண் ...ன்கிறார் மோஸ்லி.

...டியாதவர்கள் அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்தால் ...து என்பது அவருடைய யோசனை.

...டல் பருமனைக் குறைக்க, மூன்று வேளைக்குப் பதிலாக ... உணவை ஆறு வேளை கொஞ்சம் கொஞ்சமாக எடுக்க ... என டாக்டர்கள் பரிந்துரை செய்து வருகையில், கலோரி ...் கவனம் செலுத்தினால் மூன்று வேளை கூட சாப்பிடத் ...வையில்லை என்கிறது இந்த ஆய்வு.

- ஆசிரியர்

# ஜனாதிபதி மீது பழிதீர்க்க மேற்குலக நாடுகள் முயற்சி

## இளைஞர் விவகார அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட இயக்கத்தின் முதல்மட்ட தலைவர்களை இறுதி யுத்தத்தின் போது தப்பிச் செல்ல அனுமதி அளிக்காத காரணத்தாலேயே மேற்குலக நாடுகள், மகிந்த ராஜபக்ஷவை பழிதீர்க்க முயற்சிப்பதாக இளைஞர் விவகார்ர அமைச்சர் டளஸ் அளகப்பெரும தெரிவித்தார்.

கட்டுகஸ்தோட்டையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் உரையாற்றிய அவர்,

2005 ஆம் ஆண்டு 183,000 வாக்குகளால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருக்காவிடின் இந்த நாடு இப்போது எங்கே இருந்திருக்கும் என்று மக்கள் சிந்திக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ இன்று தேசியத் தலைவர் மட்டுமல்ல அவர் ஒரு சர்வதேச தலைவராக ஆகியுள்ளார். பஹ்ரேன், பலஸ்தீன், பொலிவியா போன்ற நாடுகளுக்குச் சென்ற போது அதியுயர் விருதுகளை வழங்கினார்கள். இலங்கை வரலாற்றில் இவர் போன்று ஒரு தலைவர் உருவாகி உள்ளாரா என்று நாங்கள் எங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். இறுதி யுத்தம் இடம்பெற்ற போது பிரபாகரன், உட்பட முதல் மட்ட தலைவர்களை தப்பிக்க வைக்க மேற்கத்திய உலகம் பாரிய முயற்சிகளை எடுத்தது. அதற்காக முல்லைத் தீவை அண்மித்த கடலில் யுத்தக் கப்பல்களை நிறுத்தி வைத்திருந்தனர் என்றார்.

# பிள்ளைகளின் இணைய பயன்பாடு பெற்றோருக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

பிள்ளைகள் இணையத் தளங்களைப் பயன்படுத்துவது குறித்து விழிப்பாக இருப்பது தொடர்பில் பெற்றோருக்கு விசேட பயிற்சிகளை வழங்கத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பயிற்சிகள் அதிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மட்டங்களில் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ள்ார்.

பிள்ளைகள் இணையத் தளங்களைப் பயன்படுத்தும் போது உரிய முறையில் கண்காணிக்கப் படுவதில்லை என்பதால், அவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதைக் கவனத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# இனதுவேஷத்தை தூண்டும் வகையில் கருத்துக்கள் வெளியிட்டால் தண்டனை

## வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

இனங்களுக்கு இடையில் பகையுணர்வு மற்றும் துவேஷத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவது தண்டனைக்குரிய குற்றம் என்ற சட்டத்தை துரிதமாகச் செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் புதிய சட்டம் அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு கூடிய விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர், இனங்கள் அல்லது மதங்களுக்கு இடையில் மோதல் நிலை ஏற்படுவது தவிர்க்கப்படும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# அனுமதியின்றி திறக்கப்பட்ட உணவகம் ஒரு மணி நேரத்தில் மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் சந்தைக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை அனுமதியின்றித் திறக்கப்பட்ட உணவகம் ஒன்று மானிப்பாய் பொலிஸாரின் உதவியுடன் ஒரு மணித்தியாலத்தில் மூடப்பட்டதாக வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி உணவகம் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் சுகாதார விதிமுறைகளுக்கு முரணான முறையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை திறக்கப்பட்டது. இதனை அறிந்து அவ்விடத்திற்கு பிரதேச சபையின் வருமானப் பரிசோதகருடன் சென்று குறித்த உணவகத்தினை மூடுமாறு உணவக உரிமையாளருக்குக் கூறியபோது, அவர் மறுத்துவிட்டார். இந்நிலையில் இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் என்னால் முறைப்பாட்டினைப் பதிவு செய்ததின் அடிப்படையில் பொலிஸார் உணவகத்தினை மூடச் செய்தனர் என தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# கிராமிய வீதி அபிவிருத்திக்காக 10,400 கோடி ரூபா கடன் பெறத்திட்டம்

(கொழும்பு)

கிராமிய வீதி அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து மேலும் 10 ஆயிரத்து 400 கோடி ரூபாவை கடனாக பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மக்கள் தொகை மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படையில் 1000 கிராமங்களின் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

தென், சப்ரகமுவ மாகாணங்கள், மேல் மாகாணத்தின் களுத்துறை, மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் உள்ள கிராமங்களில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

இந்தத் திட்டத்திற்காக அரசாங்கமும் ஆயிரத்து 500 கோடி ரூபாவை செலவிட வேண்டும். இந்த கடன் உடன்படிக்கை சம்பந்தமான சகலவற்றையும் முன்னெடுக்க அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

# திருட்டு மின்சாரம் பெற்ற பெண் உட்பட 8 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் திருட்டு மின்சாரம் பெற்ற பெண்ணொருவர் உட்பட் 8 பேரை நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை மின்சார சபையின் கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகளும் சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து நட்த்திய தேடுதலின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

புன்னாலைக்கட்டுவன், ஏழாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா 3 பேரும் குப்பிளானைச் சேர்ந்த 2 பேரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# காவிக்கு வெள்ளை பூசும் பாசிசம்

**தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து**

**பொது பல சேனா இப்படி செல்லமாக வளர்க்கப்படுவது அதன் சமூகத் தொகுதி அதற்கு வெகு இயல்பான தலைவரான சரத் பொன்சேகாவின் பக்கம் திரும்புவதை மாற்றுவதற்கா அல்லது வாக்குத் தளத்தில் ஒரு பகுதியை உரித்து எடுப்பதற்கா?**

பல் இன, பன் மொழி, பல் மதம், பல் கலாசாரம் அதாவது பன்மையான அமைப்பை உருவாக்குவது, மற்றும் அபாயம் நிறைந்த, மோதலான, உண்மையில் அல்லது சாத்தியமான வன்முறையான நிலைமையில் ஆட்சியாளர் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றின் பங்கு என்ன? ஆட்சி மற்றும் நாடு அதற்கு என்ன செய்யவேண்டும் மற்றும் அதன் நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும்?

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் மற்றும் ஆட்சியாளர்கள், அது இருக்க வேண்டிய ஒரு நடு-நிலையான நடுவரின் பாத்திரத்தில் இருந்து, இலங்கையின் அரசியலமைப்பு சமூகங்கள் இடையே அரசியலமைப்பின்படி அனைத்து பிரஜைகளையும் சமமாக நடத்துகின்றனவா. அல்லது அவை ஒருபக்கச் சார்பான (பொய்யான) நடுவர்களைப் போல் நடக்கின்றனவா?

விடயம் பின்னையதைப் போல இருக்குமாயின் ஆட்சி மற்றும் அரசாங்கத்தின் முகாமையாளர்கள், அங்கு நடவடிக்கையின் ஒரு மீள் ஆட்டம் 21ஆம்நூற்றாண்டின் சர்வ தேச அமைப்பின் வலையில் இடம் பெறும் என்பதை அறியாதவர்களாகவோ அல்லது அதைப்பற்றி கவலைப் படாதவர்களாகவோ இருக்கிறார்கள்.

ஆட்சி மற்றும் அரசாங்க இயந்திரங்கள், பௌத்த சிங்களவர்கள் அல்லாதவர்களை அல்லது அரசியல் கருத்து வேற்றுமையுள்ள பௌத்த சிங்களவர்களை (அதாவதுஜே.வி.பி., எப்.எஸ்.பி., ஐ.தே.க. மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உறுப்புகள்) அவர்கள் எவ்வளவுதான் வன்முறை அற்றவர்களாக இருந்தாலும் அவர்களைத்தான் எதிரிகள் அல்லது சாத்தியமான அச்சுறுத்தல்களாக கருதுகின்றனவா?

1980களின் ஆரம்பத்தில் ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் ஆட்சி, சிறில் மத்தியு மற்றும் அவரது ஜே.எஸ்.எஸ் குண்டர் படையை கருதியது போல்த்தான் தற்போதைய ஆட்சியில் உள்ள உறுப்புகள் ஜே.வி.பி., எப்.எஸ்.பி. மற்றும் மாணவர் அமைப்புகளையும் அவர்களால் வழி நடத்தப்படும் தொழிற்சங்கங்களுக்கும் எதிராக பயன்படுத்த பொது பல சேனா மற்றும் சங்க பரிவார் ஆகியவற்றுடன் சாத்தியமான கூட்டணி அமைத்துள்ளதா?

பொது பல சேனா இப்படி செல்லமாக வளர்க்கப்படுவது அதன் சமூகத் தொகுதி அதற்கு வெகு இயல்பான தலைவரான சரத் பொன்சேகாவின் பக்கம் திரும்புவதை மாற்றுவதற்கா அல்லது வாக்குத் தளத்தில் ஒரு பகுதியை உரித்து எடுப்பதற்கா?

யுத்தத்துக்கு பிந்தைய இலங்கையில் மிகவும் அதிகாரம் உள்ள மனிதர் கோட்டாபய ராஜபக்ஸ அல்ல. எனினும் அவர் மிகவும் முக்கியமான மனிதராகவும் மற்றும் மிகவும் விசேடமாக அரசாங்க கட்டமைப்புக்குள் மிகவும் செல்வாக்கு உள்ளவராகவும் திகழ்கிறார். ஆகவே முக்கியமான விடயங்களில் அவர் என்ன சொல்கிறார் என்பது வெறுமனே வாசிப்பதற்கு மட்டும் அல்ல, அதற்கு உரிய முக்கியத்துவமும் உள்ளது.

அளுத்கம சம்பவத்துக்குப் பிறகு பொது பலசேனாபற்றி அவர் பேசுவது, இதுவரை பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்க கருவிகள் தங்கள் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களை அவரிடமிருந்தே பெற்று வருவதால், அது அரசின் முன்னோக்கை அல்லது அரசு விரைவில் பின்பற்றப்போகும் நடவடிக்கையை குறிக்கிறது. பொது பல சேனா மற்றும் அளுத்கம பற்றி அவர் சொல்வதைத்தான் அரசாங்கம் செய்ய வேண்டும் மற்றும் செய்யாமல் விட வேண்டும். அவர் சொல்வது அரசாங்கம் செய்த, அல்லது செய்யாத, அல்லது செய்யாமல் விடப்பட்டவைகளின் மீதும் வெளிச்சம் பாய்ச்சுகிறது - ஏன் அப்படி.

ஒரு பத்திரிகை நேர்காணலில் கோட்டபாய ராஜபக்ஸ, பொது பல சேனாவுடன் தனக்கு தொடர்புகள் இருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். ஒருவேளை அவர் உண்மையை சொல்லியிருக்கலாம். எனினும் அவரது நேர்காணல் கூட அதிலுள்ள இரட்டை உண்மைகளின் தன்மையினால், பொது பல சேனா மீது ஒரு வகை சாக்குப் போக்கு கூறுவதாக அமைந்துள்ளது:

1. பொது பல சேனாவின்மீது அதன் நடத்தை எதைக் குறிக்கிறது, அளுத்கமவில் அதன் முக்கிய ஆளுமை உடைய நபர் என்ன சொன்னார் என்பனவற்றைப் பற்றி ஒரு ஒற்றை விமர்சனத்தை கூட அவர் மேற்கொள்ளவில்லை - கலகொடஅத்தே ஞானசார அளுத்கம பேச்சில் "ஆம்! நாங்கள் இனவாதிதான்" என்று சொன்னதை அவர் கண்டிக்கவில்லை.

2. பொது பல சேனாவை ஆயர் ராயப்பு ஜோசப் மற்றும் முஸ்லிம் தீவிரவாதிகளுடன் சமப்படுத்தி அல்லது துணையாக்கி அவர்களை சம தரத்தில் வைக்கும் அளவுக்கு அவர் சென்றுள்ளார்.

எனினும் யு-ரியுப் காணொளியில் கலகொடஅத்தே ஞானசாரவின் குறிப்பாக அளுத்கம பேச்சை மேலோட்டமாக கேட்டாலே, அது வெறுப்பான பேச்சு என்பதையும் மற்றொரு சமூகத்தின்னை மதத்தினை நோக்கி வெளிப்படுத்தும் அச்சுறுத்தல் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

ஒன்றில் ஆயர் ராயப்பு ஜோசப்போ - பொதுமக்களின் இறப்பின் எண்ணிக்கை 150,000 என்று ஆபத்தானதும், முட்டாள்தனமானதும், பொய்யானதுமான, எண்ணிக்கையை தெரிவித்திருந்தாலும் - அல்லது முஸ்லிம் தீவிரவாதிகளோ ஒருபோதும் பகிரங்கமாக சிங்களவர்களையோ அல்லது தமிழர்களையோ நோக்கி வெறுப்பான பேச்சுக்களையோ மற்றும் அச்சுறுத்தல்களையோ உச்சரித்ததாக பதிவுகள் எதுவும் இல்லை.

இன்னும் அவர்களின் உணர்ச்சிகரமான பேச்சுக்கள் காரணமாக உடனடியாக மற்றொரு சமூகத்தின் உடமைகள் மற்றும் உயிர்கள்மீது வன்முறைத் தாக்குதல் இடம்பெற்ற சம்பவங்களும் வெகுகுறைவு.

அளுத்கம மற்றும் அதைத் தொடர்ந்து உடனடியாக ஏற்பட்ட பின்விளைவுகளிலும் கூட, முஸ்லிம் தீவிரவாதிகளின் மீது அனைத்து குற்றச்சாட்டுகளும் கூறப்பட்டாலும், இறந்தவர்கள் அனைவரும் முஸ்லிம்களும் தமிழர்களுமே ஆவர். வெளிப்படையாக ஜிகாதிகள் சிங்களவர்களை இலக்கு வைக்க வில்லை அல்லது அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு திறமை இல்லை. அல்லது முஸ்லிம்கள்தான் முஸ்லிம்களையும் மற்றும் தமிழர்களையும் - வெட்டி அல்லது சுட்டு - கொன்றார்கள்!

அளுத்கம வன்முறைகளில் பொது பல சேனா நேரடியாக ஈடுபட்டிருக்கலாம் அல்லாமலும் இருக்கலாம் மற்றும் ஒரு நிறுவனம்
ஒரு தனியாள் என்கிற வகையில் குற்றம் நிரூபிக்கப்படும் வரை அப்பாவியாகத்தான் கருதப்பட வேண்டும்.

இனவாதம், இனப்பாகுபாடு, மற்றும் அன்னியர் பற்றிய அச்சம் என்பன தொடர்பாக ஐ.நா. டர்பன் பிரகடனம் மற்றும் செயற்திட்டத்தை திறமையாக நடைமுறைப்படுத்தும் அரசாங்கங்களுக்கிடையிலான பணிக்குழுவின் முன்னாள் தலைவராக கடமையாற்றியவன் என்ற வகையில் (கடமையாற்ற வேண்டியிருந்தது) கூட என்னால் அளுத்கமவில் நடத்திய ஞானசாரவின் பேச்சையும் மற்றும் முன்னைய சந்தர்ப்பங்களில் உள்ளடக்கியிருந்த தூண்டுதல்களையும் அங்கீகரிக்க முடியாது.

தனது நேர்காணலில் அளுத்கம சம்பவம் பற்றி கலந்துரையாடும்போது கோட்டாபய ராஜபக்ஸ திரும்பத்திரும்ப வலியுறுத்தியது, இந்த சம்பவத்தின் மூலகாரணமாக, போயா நாளின்போது ஒரு புத்த பிக்கு தாக்கப்பட்டதுதான் என்பதை.

அந்த சம்பவம் பற்றி அவர் தரும் செயல் விளக்கம் மிகவும் சரியானதாக இருந்தாலும்கூட, அவரது வலியுறுத்தலின் உள்நோக்கம் என்ன? நாகரிகமான ஜனநாயக நாட்டில் அத்தகைய ஒரு சம்பவத்துக்கு சில நாட்களின் பின்னர் அச்செயலை புரிந்தவர்களின் சமூகத்தின் மீது கலகம் நடத்துவதுதான் என்று தர்க்கரீதியாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதா?

இது சரியாக நாங்கள் கேள்விப்பட்ட 83 கறுப்பு ஜூலையின் அரை குறை நியாயத்துக்கு சமமாக உள்ளது: அது என்னவென்றால் 13 இராணுவவீரர்கள் புலிகளினால் கொல்லப்பட்டார்கள் என்பதுதான். அந்த வகையான வாதத்தைத்தான் அளுத்கம பற்றி நாட்டின் உயர் பாதுகாப்பு அதிகாரியிடமிருந்து நாங்கள் கேட்கிறோம் என்றால் ஜூலை 83 போல திரும்பவும் நடக்காமல் தடுப்பதற்கும் அதை நடத்தும் சாத்தியம் உள்ளவர்களை முன்கூட்டியே கைது செய்வதற்குமான அரசாங்கத்தின் தெளிவு மற்றும் அர்ப்பணிப்பு பற்றிய என்ன உத்தரவாதம் எங்களுக்கு உள்ளது?

கோட்டாபய ராஜபக்ஸவின் மூடிமறைத்து வெள்ளையடிக்கும் நேர்காணல் வெளி வந்த பிறகு நடைபெற்ற பொது பல சேனவின் ஊடக மாநாடு அதன் மறைமுக அச்சுறுத்தல்களை வெளிப்படுத்தியது. ஆட்சியினரின் சித்தப்பிரமையான கருத்தியலுக்கு உகந்தவராக தன்னை காட்டிக் கொள்வதற்காக பொதுபலசேனா ஐ.தே.க.மற்றும் டி.பி.எல்.குழுதான் அளுத்கம வன்முறைக்கு பின்னால் உள்ளவர்கள் மற்றும் அதை நடத்தியவர்கள் என குற்றம் சாட்டி தண்டனை விலக்கு பெற முயற்சிப்பது தெளிவாகத் தெரிகிறது.


அதே சமயம் ஆச்சரியத்தோடு எந்தன் புருவங்களை உயர்த்த வைப்பது என்னவென்றால், 2011ல் கலகொடஅத்தே ஞானசாரவுக்கு வழங்கிய ஐந்து வருடம் செல்லுபடியாகக்கூடிய பலமுறை நுழைவு விசாவை அமெரிக்கா இரத்து செய்தது அல்ல, ஆனால் உண்மையில் அத்தகைய ஒரு விசா முதற்கண் அவருக்கு வழங்கப்பட்டதுக்கும் மற்றும் 2012லேயே அவரது தெளிவான இனவாதம் மற்றும் கிறிஸ்தவ எதிர்ப்பு பேச்சுக்களும் செயற்பாடுகளும் ஆரம்பித்திருந்த பின்பும் 2013இல் அவரது அமெரிக்க பயணத்துக்கு அனுமதி வழங்கியதுக்கும்தான்.

பொது பல சேனாவினை தடை செய்யும்படியோ அதன் தலைமைத்துவத்தை உடனடியாக கைதுசெய்யும் படியோ நான் வாதிடவில்லை. நான் வாதிடுவதெல்லாம் ஜனாதிபதி மற்றும் அவரது சகோதரர் ஆகியோரிடமிருந்து அவர்கள் பொது பல சேனாவினை நிராகரிப்பதுடன் அதன் செய்திகளையும் மற்றும் நடத்தைகளையும் மறுதலிப்பதோடு அதற்கு எதிராக நாட்டிற்கு எச்சரிக்கை விடுக்கும் தெளிவானதும் சக்தியானதுமான அறிக்கை ஒன்று வெளிவரவேண்டும் என்றுதான்.

எனினும் இதுவரை ஒன்றில் ஜனாதிபதியிடமிருந்தோ அல்லது அவரது சக்திவாய்ந்த சகோதரரிடமிருந்தோ அவர்கள் பொது பல சேனாவுக்கு எதிராக உள்ளார்கள் என்பதையும், அதனையும் மற்றும் அது போன்ற நிறுவனங்களின் எண்ணங்களையும் மற்றும் அச்சமூட்டும் சொல்லாட்சியையும் தாங்கள் எதிர்க்கிறார்கள் என்பதையும் வெளிப்படுத்தும் சமிக்ஞையை நாட்டுக்கும் உலகத்துக்கும் தெரிவிக்கவில்லை. இந்த தீவிரவாதிகளினால் மற்றுமொரு ஜூலை 83 தூண்டப்படும் ஆபத்தை தொடர்ந்து அவர்கள் எதிர்கொள்கிறார்கள், அதனால் ஜூலை 83 ஏற்படுத்தியதை காட்டிலும் மிகவும் மோசமான சர்வதேச மற்றும் பிராந்திய பின்விளைவுகளை நாடு, அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியும்கூட எதிர்கொள்ளலாம். ●



**நான் வாதிடுவதெல்லாம் ஜனாதிபதி மற்றும் அவரது சகோதரர் ஆகியோரிடமிருந்து அவர்கள் பொதுபல சேனாவினை நிராகரிப்பதுடன் அதன் செய்திகளையும் மற்றும் நடத்தைகளையும் மறுதலிப்பதோடு அதற்கு எதிராக நாட்டிற்கு எச்சரிக்கை விடுக்கும் தெளிவானதும் சக்தியானதுமான அறிக்கை ஒன்று வெளி வரவேண்டும் என்றுதான்.**




அமெரிக்காவின் தேசிய தின வைபவத்தில் சிறப்பு அதிதியாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கில்டன் விடுதியில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

# கட்டுப்பாட்டு சோதனை

(கொழும்பு)

கட்டுநாயக்க அதிவேக வீதியின் உள்நுழையும் வாயிலில் கட்டுப்பாட்டு சோதனையை ஏற்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகவோ, தவறாகவோ அதிவேக வீதியினுள் உள்நுழையும் உந்துருளிகள், முச்சக்கர வண்டிகள் போன்றவற்றை தடுக்கும் நோக்கிலேயே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட உள்ளது.

# சட்டவிரோத ஆயுதங்களை தேடி நாடுமுழுவதும் தேடுதல் வேட்டை

நாடு முழுவதிலும் சட்டவிரோத ஆயுதங்களைத் தேடி, தேடுதல் வேட்டை நடாத்தப்பட உளளது என பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பாதாள உலக்குழுக்களினால் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள துப்பாக்கிக் கலாசாரத்தை இல்லாதொழிக்கும் நோக்கில் இவ்வாறு சட்டவிரோ ஆயுதங்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்தி கொலைகள், கொள்ளைகள், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றது.

அண்மைய மாதங்களில் தொடர் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன இதில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் ஆயுதக் குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டவிரோதமாக ஆயுதங்களை பயன்படுத்தும் நபர்களை கைது செய்ய பொதுமக்களின் உதவியும் அவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கவனத்தை திசை திருப்ப ஞானசார தேரர் முயற்சி

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் கவனத்தை திசை திருப்ப முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பேருவளை, அளுத்கம வன்முறைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸே பொறுப்பு என்ற ஞானசார தேரரின் குற்றச்சாட்டு ஏற்றுக கொள்ளக் கூடியதல்ல.

பொதுபல சேனா இயக்கமே அண்மைய வன்முறைகளின் பின்னணியில் செயற்பட்டது. வன்முறைச் சம்பவங்களில் கட்சியோ கட்சியின் உறுப்பினர்களோ பங்கேற்கவில்லை.

அனைவரினதும் கவனத்தை திசை திருப்பி குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்கில் ஞானசார தேரர் இவ்வாறு என்மீது குற்றம் சுமத்தி வருகின்றார்.

ஒட்டுமொத்த வன்முறைச் சம்பவங்களும் மிகவும் நன்றாகத் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. பொதுபல சேனா இயக்கமே இந்தக் குற்றச்செயலை மேற்கொண்டிருந்தது என்பது வெட்ட வெளிச்சமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இத்தாலியில் வேலை வாய்ப்பு மோசடிக் காரர்களிடம் ஏமாறவேண்டாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் கோரிக்கை


இத்தாலியில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபடுபவர்களிடம் ஏமாற வேண்டாம் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார். இத்தாலியில் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுப்பதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் இத்தாலி அரசுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு அமைவாக செயற்பட வேண்டும் இவ்விடயத்தில் இரண்டாம் தரப்பினரது தலையீடு இல்லை.

இந்த ஒப்பந்தத்தின்படி தெரிவு செய்யப்பட்ட இலங்கை பெண்கள் எட்டுப் பேர் நாளை இத்தாலிக்கு பயணமாகவுள்ளனர்.

இவர்களுக்கான பயணச்சீட்டு வழங்கும் நிகழ்வு அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இத்தாலியில் வேலை வாய்ப்புக்காக தெரிவு செய்யப்பட்ட இவர்கள் 4 வருட காலத்தை அங்கே கழிக்க முடியும் எனவும் தேவை ஏற்படின் அதன் இடையே நாடு திரும்ப முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# பொதுபலசேனாவை அழிக்க நினைப்பது பௌத்த மதத்தை அழிப்பதற்கு சமம்

## ஞானசார தேரர் தெரிவிப்பு



பொதுபலசேனா என்பது வெறுமனே ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு அல்ல. பொதுபலசேனா என்பது நாட்டில் உள்ள அனைத்து பௌத்த இனத்தையும் சிங்கள மககளையும் கொண்ட அமைப்பு. எம்மை அழிக்க நினைப்பது பௌத்த மக்களை அழிப்பதற்கு சமமாகும்.

இதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஒரு கிராமத்தில் ஏற்பட்ட சிறிய சண்டை இன்று சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்லப்பட்டு விட்டது. அளுத்கம சம்பவம் ஏற்பட்டதற்கு முஸ்லிம் அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளே காரணம்.

சிறிய பிரச்சினையாக ஆரம்பித்த விடயம் இறுதியில் இரு இனங்களுக்கிடையிலான கலவரமாக மாற்றப்பட்டுவிட்டது. நடந்த சம்பவம் ஒரு சிறிய சம்பவம். அதை பெரிதுபடுத்தி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

அது மட்டுமன்றி இந்தப் பிரச்சினைக்கு சம்பந்தம் இல்லாத எம்மீது இறுதியில் குற்றம் சுமத்திவிட்டனர்.

இந்த இனக்கலவரத்திற்கு நாம்தான் காரணம். அவ்வாறு பொதுபலசேனா அமைப்பினர் தான் காரணம் என்றால் அதற்காக எம்மைக் கைது செய்து சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

இப்போது ஆளும் தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் பொதுபலசேனா அமைப்பினரையே குற்றம் சுமத்தி வருகின்றனர். இது வேடிக்கையாகவும் எமக்கு வேதனையாகவும் உள்ளது.

உண்மையிலேயே இந்தச் சம்பவம் ஏன் ஏற்பட்டது என்பதை எவரும் கேட்கவில்லை.

நாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக தெரிவித்தோம். நாட்டில் முஸ்லிம் மதவாதிகளின் தீவிரவாத செயற்பாடுகள் காணப்படுகின்றது என அதை எவரும் கண்டுகொள்ளவில்லை.

முஸ்லிம் அமைச்சர்களும் அமைப்புக்களும் பேருவளை, தர்காநகரை அமைதியான நகரமாகவே தொடர்ந்தும் சித்தரித்தனர். ஆனால் தர்காநகர் என்பது தீவிரவாதத்தின் மையபூமியாகும்.

நாட்டில் இன்று 30 பௌத்த அமைப்புக்கள் உள்ளன. பெருமபான்மை சமூகத்தின் எண்ணிக்கையில் இது மிகவும் குறைந்தளவே ஆகும் என்றார்.



கொழும்பு, பம்பலப்பிட்டிய ரயில் நிலையத்துக்கு அருகில், இரு ரயில் பெட்டிகள் தடம்புரண்டதையடுத்து ஏற்பட்ட சேதங்களை காணலாம்.

# வெளிநாடுகளிலுள்ள புலிகளே நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றனர்

## மைத்திரிபால சிறிசேன குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டுக்கு எதிராக செயற்படும் சக்திகளின் பின்னணியில் வெளிநாடுகளில் உள்ள புலிகளே இருப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அலவக் கயில் நேற்று முன்னதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச விசாரணையின் இறுதியில் நாட்டை பிரிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

பிரபாகரனின் மீது கை வைக்கவில்லை என்றால் சர்வதேச விசாரணை தற்போது இல்லை. இந்தச் சர்வதேச விசாரணையின் பின்னணியில் இருபபவர்கள் வெளிநாடுகளில் எஞ்சி உள்ள விடுதலை புலி செயற்பாட்டாளர்களே.

இந்த நிலையில், இவ்வாறான விசாரணையின் பின்னர் எந்த நாடும் முழுமையானதாக இல்லை. எல்லா நாடுகளும் பிரிந்தே சென்றன. அதுவே வரலாறு. இதனையே விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர் என்றார்.



# சிதம்பரபுரம் முகாம் மக்களுக்கு காணி வழங்க நடவடிக்கை

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு



(வவுனியா)

சிதம்பரபுரம் முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு அப்பகுதியிலேயே காணி வழங்க நடவடிக்கை எடுக்க வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சரும் வன்னி அபிவிருத்திக்குழு தலைவருமான அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது அங்கு வந்த சிதம்பரபுரம் கிராம மக்கள் தமது பிரச்சினை தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழுவிற்கு தெரியப்படுத்தினர்.

இது தொடர்பில் அமைச்சர், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், நுனைஸ்பாறுக், எம்.பி. பாறுக் மற்றும் பிரதேச செயலாளர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்துரையாடினர்.

1993 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பகுதியில் நலன்புரி நிலையம் இயங்கியதாகவும் அங்கிருந்த மக்களில் பலர் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ள நிலையில் தற்போது 197 குடும்பங்கள் அங்கேயே குடியிருக்கின்றனர். அவர்களுக்கு எந்தவித காணிகளும் இல்லை. அதனாலேயே அப்பகுதியில் தொடர்ந்து குடியிருக்கின்றனர். எனவே, அவர்கள் குடியிருக்கும் முகாம் காணிகளை அவர்களுக்கே வழங்க வேண்டும் என இதன் போது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அக்குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் றிசாட் பதியுதீன் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவிடம் தெரிவித்தார். ஒருங்கிணைப்புக் குழுவும் அதற்கு ஆதரவு தெரிவித்தமையால் அவர்களுக்கு விரைவில் காணிகள் வழங்க நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார். (70)

## முன்பள்ளி புனரமைப்பு

யாழ்.பிரதேச சமுர்த்தி செயலணி ஊடாக ஜே/85 கிராம அலுவலர் பிரிவிலுள்ள நித்திய ஒளி சனசமூகநிலைய முன்பள்ளி புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ரூபா 1.50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் பிரகாரம மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டதாக சமுர்த்தி மகா சங்கத்தின் நிர்வாக இயக்குநர் ம.கியூமன் தெரிவித்தார். அத்துடன் ஜே/84 கிராம அலுவலர் பிரிவிலுள்ள நர்வாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்திற்கும் ரூபா 81,000 நிதி ஒதுக்கீடு மூலம் மலசலகூடம புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (105)

## நல்லூர் பொதுச்சபை உறுப்பினர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தொகுதிக்கான பொதுச்சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கலந்துரையாடல் நல்லூர் பிரதேசபை எதிர்கட்சித்தலைவர் அம்பலம் இரவீந்திரதாசன் தலைமையில், பொற்பதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ்.சுபநாதன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெரிவில் பொதுச்சபை தலைவராக அம்பலம் இரவீந்திரதாசன், செயலாளராக சுபநாதன், உபதலைவராக கஜன், உபசெயலாளராக ச.ஜெகதீஸ்வரன், பொருளாளராக க.ரஜீவன், உறுப்பினர்களாக மொத்தம் 25 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் கொடிமூலம் நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகைத்தல் - மது எதிர்ப்புத் தினம் 2014 கொடி விற்பனை மூலம் பெரும் நிதி சேகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்கத்தின் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் யாழ்.நகர் கிழக்கு மற்றும் யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வலயங்களுக்குட்பட்ட மக்களிடமிருந்து கொடி விற்பனை மூலம் நிதி சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிதியினை கொண்டு சமுர்த்தி பயனாளிகளுக்கு கல்வி, சுயதொழில், வேலைவாய்ப்பு போன்ற சமூக நலன்புரித்திட்டங்களை அமுல்படுத்திவருகின்றனர்.

கடந்த வருடம் கொடி விற்பனை மூலம் கிடைக்கப்பட்ட நிதியிலிருந்து வறியவிதவைகளுக்கும் தையல் இயந்திரங்களும், வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் மேலும் 250 மாணவர்களுக்கு தலா 500 ரூபா ஒரு வருடத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. வறிய விதவைகளுக்கும் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக டெங்குஒழிப்பு நடவடிக்கை, மனைப் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் மூலம் தென்னம் கன்றுகள் வழங்கல், மது பாவனையிலிருந்து மீண்டவர்களை பாராட்டி பரிசுகள் வழங்கப்படுவது விசேட அம்சமாகும். (105)

## கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவ பெருந்திருவிழா கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வரை 13 தினங்கள் நடைபெற்றன. இதன் போது கந்த புராணம என்னும் விடயப்பரப்பில் தொடர் தெய்வீக சொற்பொழிவினை வழங்கிய யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் செஞ்சொற்வேந்தர் எஸ்.ரி.குமரன் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு ஆலய பரிபாலன சபைத்தலைவர் எஸ்.முருகையா தலைமையில் மஹோற்சவ இறுதித்தினமாகிய நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆலய பிரதம [illegible] பஞ்சலிங்ககுருக்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இத் தொடர் சொற்பொழிவு விடயப்பரப்பில் மாணவர்களிடையே கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்த மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் சைவ நெறியினை உள்ளடக்கிய வகையில் நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (63)

## றமழான் நற்சிந்தனை



எவர் றமழான் மாதத்தில் நோய் அல்லது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட எந்தக்காரணமுமின்றி றமழானுடைய ஒரு நாள் நோன்பை விட்டு விடுகிறாரோ அவர் ரமழான் அல்லாத காலத்தில் ஆயுள் முழுவதும் நோன்பிருந்தாலும் அதற்குப் பகரமாக ஆகமுடியாது என நபி முஹம்மது (ஸல்) கூறியுள்ளார்கள். நூல் - அஹ்மத் (105)

## பொதுக்கூட்டம்

பளை வர்த்தக சங்கத்தின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் பி.ப. 3.30.மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் குலேந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு பெருமளவான வர்த்தகர்கள் சமுகம் தந்திருந்ததுடன் பளை வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களின் பாதுகாப்பு கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. இந்நிகழ்வில் பளைப்பொலிஸ் பொறுப்பதிகாரி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (37)

## முரசின் இன்றைய பலன்



(07.07.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் ஆனிமாதம் 23 ஆம் திகதி.
தசமி / அமிர்தம்.
சித்திரை நட்சத்திரம் மு.இ. 11.22 வரை. பின் விசாகம்.
இராகு காலம 07.28 - 08.58 வரை. சுபநேரம 11.58 - 01.28 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | முன்னேற்றத்திற்கு குறுக்கீடாக இருந்த விடயம் நீங்குதல், உங்கள் திறமைகள் சிறந்து விளங்க சந்தர்ப்பம் ஒன்று உருவாதல். |
| ரிஷபம் | சகோதரர் உறவில் பாதிப்பு ஏற்படுவதற்கு சொத்துப் பங்கீடு காரணமாக அமைதல், அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் அச்ச நிலை ஏற்படல். |
| மிதுனம் | இடைத்தங்கல் நாட்டிலிருந்து செல்லவிரும்பிய இடத்தினை அடைதல், பாதுகாப்பு நன்றாக அமைந்தமையினால் திருட்டினின்றும் பொருட்கள் தப்பிவிடல். |
| கடகம் | தாயாரின் தேகநலம் கவலைக் கிடமாகலாம் என நினைத்து கவலையுறல், தற்காலிக பணி நிரந்தரமாக்கப்படுவதை எண்ணி ஆனந்தமடைதல். |
| சிம்மம் | கடந்த காலத்தில் நடந்த சோக சம்பவத்தினை நினைத்து மனம் வாட்டமடைதல், கண்டும் காணாமற் சென்றதால் எதிரியின் தொல்லை அகன்று விடல். |
| கன்னி | வாகனயோகம், மனை என்பன கிட்டுவதற்கு பூர்வ சொத்தின் ஒரு பகுதியை விற்கமுயற்சி எடுத்தல், பெற்றோரின் தேகநலம் மேம்படைவதினால் வெளியூர் பயணம் செல்ல உத்தேசித்தல். |
| துலாம் | புதியன கொள்வனவு செய்கையில் நம்பகத்தன்மையை கவனமாக பரிசீலனை செய்க, பொறுமை சகிப்புத் தன்மை விட்டுக்கொடுப்பினால் வரவிருந்த முரண்பாடு விலகுதல். |
| விருச்சிகம் | ஏழரைச் சனி நடப்பதினால் புதிய முயற்சியில் பெருந்தொகை முதலீட்டை தவிர்த்தல், காசோலைகள் திரும்புவதினால் வங்கித் தொடர்பு கேள்விக் குறியாதல். |
| தனுசு | அஷ்டமத்து வியாழன் நடைபெறுவதினால் புதிய முயற்சி ஆரம்பிக்க தயக்க மேற்படல், போலி நாணயம், முலாம் பூசப்பட்ட நகைகள் கைக்கெட்டும் அபாயம் பற்றி எச்சரிக்கை நன்றாகும். |
| மகரம் | கைவிட்டிருந்த திருமணப் பேச்சினை வியாழசுகம் இருப்பதினால் ஆரம்பித்தல், சகோதர வழியில் நன்மை கிட்டியதால் புதிய தொழில் முயற்சி ஆரம்பம். |
| கும்பம் | மாமன்மாருடன் ஏற்பட்ட முறுகல் நிலை சுமுகமாகத் தீர்ந்து உறவுக்கு கைகொடுத்தல், பொறுத்த கட்டத்தில் திக்கு முக்காடிய வேளை சகோதரர் உதவி செய்தல். |
| மீனம் | கைவிடப்பட்டிருந்த வெளியூர் பயணத்தை மீண்டும் தொடர உத்தேசித்தல், பங்குத் தொழிலைக் கைவிட்டு விட்டு தனித்தியங்க ஆரம்பித்தல். |

# களத்திற்கு வெளியில்...

பிரான்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது பெருமை அளிக்கிறது. இப்போட்டியில் இரு அணிகளும் தடுப்பாட்டத்தில் சிறப்பாக விளையாடின. இதனால் தான் அதிகமான கோல் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. கடந்த 4 உலக கோப்பை போட்டிகளில் தொடர்ந்து அரையிறுதிக்கு முன்னேறி இருக்கிறோம். இது ஒரு நல்ல சாதனையாகும். இப்போது நாங்கள் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டியது அவசியம். இந்த உலக கோப்பையில் எங்களது ஆட்டம் ஒரே மாதிரி சீரானதாக இல்லை. சொல்லப்போனால் எங்களது மிகச் சிறந்த ஆட்டம் இன்னும் வெளியாகவில்லை. வரும் ஆட்டங்களில் முழு திறமையை வெளிப்படுத்த முயற்சிப்போம்.

**ஜோகிம் லோ (ஜேர்மனி கோல் காப்பாளர்)**

உலக கிண்ணக் கால்பந்துத் தொடரில் இத்தகைய நிலையை எட்டியதில், ஜேர்மனியை போன்று எங்கள் அணிக்கு அனுபவம் கிடையாது. என்றாலும் இந்த உலக கோப்பையில் பிரான்ஸ் வீரர்கள் களத்திலும், வெளியிலும் செயற்பட்ட விதம் பெருமை அளிக்கிறது. இந்த அணிக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளது.

**டெஸ்சாம்ஸ் (பிரான்ஸ் பயிற்சியாளர்)**

பந்தை மிகச்சரியான இலக்கில் அடித்து வலைக்குள் அனுப்பிய வகையில், இன்றைய தினம் எனக்கு சிறந்த நாள். இது போன்ற ஷொட்டை அடிக்க நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் எல்லா நாட்களிலும் அவ்வாறு அடிக்க முடியாது. இந்தக் கோல் மூலம் அணியின் வெற்றிக்கு உதவியது மகிழ்ச்சி அளிக்கிறது.

**டேவிஸ் லூயிஸ் (ஜேர்மனி வீரர்)**

கடந்த 3 ஆட்டங்களின் போதே நெய்மர் மற்ற அணி வீரர்களால் குறிவைக்கப்பட்டு வேட்டையாடப்படுகிறார் என்று நான் சொன்னேன். ஆனால் அது உண்மையல்ல என்று மற்ற அணியினர் தெரிவித்தனர். நெய்மரை காயப்படுத்திய ஜுவான் ஜுனிகாவுக்கு மஞ்சள் அட்டை கூட நடுவர் காண்பிக்கவில்லை. ஆனால் ஒன்றும் இல்லாத விடயத்துக்கு தியாகோ சில்வாவுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. நெய்மரை நாங்கள் இழப்பது கடினமான விடயம் தான். இருப்பினும் எல்லாம் நல்லபடியாக முடியும் என்று நம்புகிறேன்.

**லூயிஸ் பெலிப் ஸ்காலரி (பிரேசில் பயிற்சியாளர்)**

நெய்மர் எங்கள் அணியில் மிகவும் மூக்கியமான வீரர். நாங்கள் அவரை அதிகம் நம்பியிருந்தோம். இந்தச் சூழ்நிலையிலும் கிண்ணத்தை வெல்லும் திறமை எங்கள் அணிக்கு உள்ளது. நெய்மருக்காக இந்தக்கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற விருப்பம் எங்கள் அணி மேலும் சிறப்பான ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்த உத்வேகம் அளிக்கும்.

**தியாகோ சில்வா (பிரேசில் கப்டன்)**

பிரேசில் அணிக்கெதிரான போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இரு அணிகளிலுமே சிறந்த வீரர்கள் இடம் பெற்றிருந்ததால், ஆட்டத்தில் அனல் பறந்ததில் வியப்பில்லை. திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற வேகத்தில் சிலர் முரட்டுத்தனமாக விளையாடியது துரதிர்ஷ்டவசமானது. ஆட்டம் முழுவதுமே பதற்றமாக இருந்தது. உலக கோப்பையின் பிரதான சுற்றுக்கு தகுதி பெற முடியாமல் பல ஆண்டுகளாக தவித்து வந்த நிலையில், இம்முறை காலிறுதி வரை முன்னேறி நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளோம். நாங்களும் பங்கேற்றோம் என்ற வகையில் இல்லாமல் மிகச் சிறந்த அணிகளுக்கு ஈடு கொடுத்து விளையாடினோம் என்ற திருப்தியுடன் திரும்புகிறோம். அடுத்த உலக கோப்பையில் இன்னும் வலுவான அணியாக இடம் பெறுவோம்.

**ஜோஸ் பெர்க்மான் (கொலம்பியா பயிற்சியாளர்)**

நாங்கள் இறுதி வரை சிறப்பாகவே விளையாடினோம். துரதிஷ்டவசமாக ஸ்பெயினை சேர்ந்த நடுவர் கார்லோஸ் வெலாஸ்கோ கார்பெல்லோவின் முடிவுகள் எங்களுக்கு எதிராகவே அமைந்தன. பிரேசில் வீரர்கள் வேண்டுமென்றே முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டனர். பெர்னான்டினோ மூன்று முறை என்னை வேண்டுமென்றே இடித்துக் கீழே தள்ளினார். ஆனால், அவருக்கு மஞ்ச்ள் அட்டை கூட காட்டி எச்சரிக்காமல் நடுவர் கார்பெல்லோ பாரபட்சமாக நடந்து கொண்டார். ஆட்டத்தின் முடிவில் நடுவரின் மோசமான செயற்பாடு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இனி செய்வதற்கு ஒன்றுமில்லை. உலக கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் இருந்தோம். அந்தக் கனவு கலைந்துவிட்டது வருத்தம் அளிக்கிறது. அதே சமயம், பிரேசில் சிறப்பான அணி என்பதில் சந்தேகம் இல்லை. எங்கள் மீது நம்பிக்கை வைத்து கடைசி வரை ஆதரவளித்த இரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உலக கோப்பையில் காலிறுதி வரை முன்னேறியது பெருமையாக உள்ளது.

**ஜேம்ஸ் ரோட்ரீக்ஸ் (கொலம்பிய வீரர்)**

# அரையிறுதியில் நெதர்லாந்து

(ரியோ டி ஜெனிரோ)

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு நெதர்லாந்து அணி முன்னேறியுள்ளது. 20ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி பிரேசில் நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு 1.30 மணிக்கு நடைபெற்ற நான்காவது காலிறுதிப் போட்டியில் நெதர்லாந்து ஹோஸ்டாரிக்க அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தம் வகையில் முட்டி மோதிக் கொண்டன. குறிப்பாக முதல் முறையாக அரையிறுதிக்கு முன்னேறும் முனைப்புடன் ஹோஸ்டரிக்க அணி செயற்பட்டது. ஆனால், இரு அணிகளின் கோல் அடிக்கும் முயற்சிக்கு இறுதி வரை பலன்கிடைக்கவில்லை. மேலதிக நேரம் வழங்கப்பட்டது. மேலதிக நேரத்திலும் கோல் எதனையும் இரு அணிகளாலும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதில் நெதர்லாந்து 4-3 என்ற கோல் கணக்கில் கோஸ்டாரிகா அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

நெதர்லாந்து அணி அரையிறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீன அணியை எதிர்கொள்ளவுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இரு அணிகளும் மோதவுள்ளன.



ஆர்ஜென்ரீனா 5ஆவது முறையாக அரையிறுதிக்கு நுழைந்துள்ளது. 2 முறை சம்பியனான அந்த அணி கடைசியாக 1990ஆம் ஆண்டு இறுதிப்போட்டி வரை நுழைந்து ஜேர்மனியிடம் தோற்றது. 1998, 2006, 2010 ஆகிய போட்டிகளில் காலிறுதியில் தோல்வியைத் தழுவியது.

நெதர்லாந்து அணி தொடர்ந்து 2ஆவது முறையாக அரையிறுதிக்கு தகுதி பெற்றது. கடந்த முறை இறுதிப்போட்டி வரை முன்னேறிய நெதர்லாந்து ஸ்பெயினிடம் கிண்ணத்தைக் கோட்டை விட்டது. ஒட்டுமொத்தமாக 5ஆவது தடவையாக அரையிறுதிக்கு நுழைந்துள்ளது. 1998 அரையிறுதியில் அந்த அணி பிரான்சிடம் தோற்றிருந்தது. 1974, 1978 ஆகிய போட்டிகளில் இறுதி ஆட்டத்தில் தோல்வி அடைந்தது. இரு அணிகளும் 8 முறை மோதியுள்ளன. இதில் ஆர்ஜன்ரீனா ஒரு தடவையும் நெதர்லாந்து 4 முறையும் வெற்றி பெற்றுள்ளன. 3 ஆட்டம் சமநிலையானது.

# நெய்மர் வெளியேற்றம் பிரபலங்கள் அனுதாபம்

உலகக் கோப்பைக் கனவுடன் களமிறங்கிய நெய்மர் காயமடைந்து விலகியுள்ளதையடுத்து அவருக்கு விளையாட்டின் சகல துறைகளிலிருந்தும் ஆறுதல் மழை பெர்ழிந்து வருகிறது.

நெய்மர் முதுகை உடைத்ததாக கொலம்பிய வீரர் சுனைகாவுக்கு சமூக வலைத்தளங்களில் கடும் வசைச் செய்தி வந்த வண்ணம் உள்ளன. இதில் அவருக்கு கொலை மிரட்டல் மற்றும் நிறவெறித்தாக்குதல்களும் தொடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் அவருக்கு பவுல் கொடுத்து வெளியேற்றாத ஸ்பானிய நடுவர் கார்லோஸ் வெலாஸ்கோவுக்கும் கடும் வசை மழை பொழியப்படுகிறது. நெய்மரின் பார்சிலோனா அணி நண்பரும் சக வீரருமான ஆர்ஜன்ரீனா அணியின் மெஸ்சி, தனது பேஸ்புக்கில் இருவரும் பார்சிலோனா அணியின் சீருடையில் சேர்ந்து இருக்கும் படத்தை வெளியிட்டு, "நெய்மர், நீங்கள் விரைவில் குணமடைவீர்கள் என்று நம்புகிறேன் எனது நண்பரே" என்று பதிவிட்டுள்ளார்.

உலகின் அதிவேக மன்னன், ஜமேக்காவின் உலக சம்பியன் உசைன் போல்ட் தனது டிவிட்டரில், இந்தச் செய்தி வருத்தமளிக்கிறது, விரைவில் குணமடைய வாழ்த்துக்கள் என்று பதிவிட்டுள்ளார்.

கூடைப்பந்து நட்சத்திர வீரர் லே பிரான் ஜேம்ஸ் கூட என்ன மாதிரியான வீரர் நெய்மர், அவருக்கு ஏற்பட்ட காயம் பற்றிய செய்தியை வெறுக்கிறேன், விரைவில் குணமடைய வாழ்த்துக்கள் என்று பதிவிட்டுள்ளார்.

ஆர்ஜன்ரீன முன்னாள் நட்சத்திரம் மரடோனா, தனது வெனிசூலா தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கூறுகையில், 'நெய்மர் போன்ற வீரர் ஒருவர் விழுங்கப்பட்டு, களத்திலிருந்து தூக்கிச் செல்லப்படுவது என்ன விளையாட்டு? இந்த மாதிரி விளையாட்டில் எனக்கு உடன்பாடில்லை. அந்த ஸ்பானிய நடுவர் மிக மோசம். நான் கடந்த 10 ஆண்டுகளில் பார்த்ததில் இவர்தான் படு மோசம்" என்று கூறினார்.

காயம் ஏற்படுத்திய கொலம்பிய வீரர் சுனைகா கூறுகையில், நான் எந்த வீரரையும் காயப்படுத்தவேண்டும் என்று ஆடுவதில்லை. ஆனால் நான் களத்தில் இருக்கும்போது எனது அணிக்காக ஆடவேண்டும், நான் அணிந்த சீருடைக்கு நன்றிக்கடன் பட்டவனாக ஆடவேண்டும். யாரையும் காயப்படுத்தும் எண்ணம் இல்லை என்று கூறியுள்ளார்.

# ஹோலியைத் துரத்தும் இங்கிலாந்து வீராங்கனை

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வீராங்கனை டானியலே யாட் விராட் ஹோலியை விடாமல் துரத்தி வருகிறாராம்.

இந்த ஆண்டு நடைபெற்ற ருவென்ரி-20 உலகக்கிண்ணப் போட்டியின் போது அரையிறுதியில் ஹோலி 44 பந்துகளில் 72 ஓட்டங்களை குவித்து தென்னாபிரிக்காவை தொடரை விட்டு வெளியேற்றினார்.

இவரது அதிரடி ஆட்டத்தை பார்த்து அசந்து போன இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனை டானி யலே யாட் அப்போதே தனது டிவிட்டர் பக்கத்தில், ஹோலி என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று டிவிட் செய்திருந்தார்.

அப்போது ஏதோ விளையாட்டாக செய்திருக்கிறார் என்று பார்த்தால் உண்மையில் அவருக்கு அடிமனதில் அந்த எண்ணம் இருக்கிறதாம்.

தற்போது இந்திய அணி இங்கிலாந்து அணியுடன் மோதவுள்ளது. அதற்காக இங்கிலாந்து சுற்றுப்பயணம் செய்துள்ளது.

அப்போது பயிற்சி ஆட்டத்தில் இருந்த ஹோலியை டானியலே யாட் பார்த்து அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்தப் படத்தை டானியலே யாட்டின் சகோதரர் மைக்ஸ் டிவிட்டரில் பதிவு செய்து இவர்கள் ஒரு சிறந்த ஜோடியாக இருப்பார்கள். ஹா..ஹா.. என்று டிவிட் செய்துள்ளார்.

# அம்லா சதம்; வென்றது தென்னாபிரிக்கா




(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரக்க அணி 76 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி அம்லாவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா 130 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 109 ஓட்டங்களைப் பெற்றார். சர்வதேச ஒரு நாள் போட்டியில் அம்லா பெற்றுக்கொண்ட 13ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் கப்டன் டி விலியர்ஸ் 75, குயின் டு கொக் 27, டேவிட் மில்லர் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜந்த மெண்டிஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 305 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை 40.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் குமார் சங்கக்கார 88, டில்சான் 40, குசல் பெரேரா 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன், மோர்கன் ஆகியோர் தலா இரண்டு, இம்ரான் தாஹிர் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக அம்லா தெரிவு செய்யப்பட்டார்.

## விளையாட்டுச் செய்திகள்

# விளையாடும் வாய்ப்புக்கள் அதிகரித்தால் வீரர்களின் தரம் முன்னேற்றம் அடையும்

## யாழ். மாவட்ட தெரிவு அணிக் கப்டன் அலன்ராஜ்



(யாழ்ப்பாணம்)

வெளியூரிலும் உள்ளூரிலும் தொடர்ந்து விளையாடும் வாய்ப்புகள் ஏற்படுமிடத்து எங்கள் மாவட்ட கிரிக்கெட் வீரர்களின் தரம் அதிகரிக்கக்கூடிய அதிக வாய்ப்பு உருவாகும். அத்துடன் அது எங்களுடைய திறனை மதிப்பீடு செய்யக்கூடியவாறு அமையும் என யாழ். மாவட்ட தெரிவு அணியின் கப்டன் அலன்ராஜ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியா - மெல்பேர்ன் யாறா வலி கிரிக்கெட் கழக அணியுடனான ருவென்ரி-20 போட்டியில் அபார வெற்றியீட்டியமை தொடர்பாக எமது செய்தியாளர் கருத்துக் கேட்ட போதே அலன்ராஜ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், இவ்வாறானதொரு போட்டியை ஒழுங்கமைத்து எமக்கு விளையாடும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த யாழ். படைகளின் கட்டளைத் தளபதி உதய பெரேரா மற்றும் பவுண்டேஷன் ஒவ் குட்நெஸ் நிறுவனம் ஆகியவற்றுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் கப்டன் என்ற முறையில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எங்கள் ஊரில், சொந்த இடத்தில் நாங்கள் மெல்பேர்ன் யாறா வலி அணிக்கெதிராக பெரிய வெற்றியைப் பதிவாக்கியிருக்கின்றோம். இது மகிழ்ச்சி தரும் ஒன்று. ஆனால், இந்த வெற்றியின் மூலம் எங்கள் தரம் மேலெழும் என்றில்லை. இது போன்ற போட்டிகள் உள்ளூர், வெளியூர்களில் நடாத்தப்படவேண்டும். அவ்வாறான போட்டிகளில் நாங்கள் தொடர்ந்து பங்குபற்றுவதன் மூலமே எங்கள் கிரிக்கெட் தரத்தை மேல் நிலையை நோக்கி நகர்த்தக்கூடியதாக அமையும். அத்துடன் எங்கள் தரத்தையும் எங்களால் மதிப்பீடு செய்யக்கூடியதாகவும் இருக்கும்.

இப்போட்டியில் வென்ற உத்வேகம் மேலும் பல போட்டிகளில் பங்குபற்றவேண்டும், அதில் வெற்றி வாகை சூடவேண்டும் என்ற எண்ணத்தை எங்களுக்குள் உருவாக்கியுள்ளது. யாழ். மாவட்ட தெரிவு அணியாக நாங்கள் தொடர்ந்தும் பல போட்டிகளில் பங்குபற்றவேண்டும். வாரத்திலோ அல்லது மாதத்திலோ ஒரு நாளாவது நாங்கள் கூட்டாக இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட தெரிவு அணிக்கான கட்டமைப்புகள் தொடர்ந்து பேணப்படுமிடத்து நல்ல முன்னேற்றம் கிடைக்கும். அது எங்களின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)

# சீமா, கலைமதி, பாரதி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடாத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு மீசாலை சீமா, புத்தூர் கலைமதி, நாயன்மார்கட்டு பாரதி அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு மூன்று போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் மீசாலை சீமா ஏ அணியும் மட்டுவில் ஞானதீபம் அணியும் மோதின. இதில் மீசாலை சீமா அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் புத்தூர் கலைமதி பி அணியும் உரும்பிராய் சிவகுமரன் அணியும் மோதின. இதில் புத்தூர் கலைமதி பி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. மற்றுமொரு போட்டியில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியும் நாயன்மார்கட்டு பாரதி பி அணியும் மோதின. இதில் பாரதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது.

# கிண்ணம் வென்றது இளவாலை மத்தி





(சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகம் நடாத்திய அமரர் புஸ்பராணி வாமதேவன் நினைவுக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இளவாலை மத்தி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் இளவாலை மத்தி மற்றும் காங்கேசன்துறை ஐக்கிய அணிகள் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை மத்தி முதல் செட்டை 25-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிக் கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் காங்கேசன்துறை ஐக்கிய அணி செயற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இளவாலை மத்தியின் விரைவான செயற்பாட்டிற்கு ஈடுகொடுக்க முடியாமல் அடுத்து நடைபெற்ற இரு செட்களையும் காங்கேசன்துறை ஐக்கிய அணி பறிகொடுத்தது. இறுதியில் இளவாலை மத்தி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் சிறப்பு விருந்தினராக யாழ். கரப்பந்தாட்டச் சங்கத்தின் வலிகாமம் வலய கரப்பந்தாட்ட இணைப்பாளர் சி. தயாளபாலன் கலந்துகொண்டார். (93)

# சச்சின் அணி பெரு வெற்றி

(லண்டன்)

ஷேன் வோர்ன் தலைமையிலான உலக லெவன் அணியை ஏழு விக்கெட்டுக்களால் சச்சின் தலைமையில் எம்.சி.சி. அணி வீழ்த்தியது.

லண்டன் லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தின் 200ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் வகையில் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மெல்பேர்ன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி.) அணிக்கும் ஷேன் வோர்னே தலைமையிலான உலக லெவன் அணிக்கும் இடையே 50 ஓவர் கொண்ட காட்சிக் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் லோர்ட்சில் நடைபெற்றது.

இதில் முதலில் ஆடிய உலக லெவன் அணி 50 ஓவர்கள் நிறைவில் எழு விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுவராஜ்சிங் 132, சேவாக் 22, கில்கிறிஸ் 29, கொலிங்வூட் 40, பீற்றர்சிடில் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய எம்.சி.சி. அணி 45.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஆரோன் பிஞ்ச் 145 பந்துகளை எதிர்கொண்டு 23 பவுண்டரிகள், ஆறு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 181, சச்சின் டெண்டுல்கர் 44, பிரையன் லாரா 23, சந்தர்போல் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முரளிதரன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

# 12 ஓட்டங்களால் நியூசிலாந்து வெற்றி

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி-20 போட்டியில் நியூசிலாந்து அணி டக்வேத் லூயிஸ் முறைப்படி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 18 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பிளைச்சர் 52, பிராவோ 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரிம் சௌத்தி, பௌல்டன், அண்டர்சன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து அணி 15 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதில் மக்கலம் 40, ரெய்லர் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டரன் சமி மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக மக்கலம் தெரிவு செய்யப்பட்டார். இடையிடையே பெய்த மழை காரணமாக இப்போட்டி தடைப்பட்டதுடன் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

# இந்த வார நடுப்பகுதியில் 2ஆவது சுற்று

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இந்த வார நடுப்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் இரண்டாவது சுற்றுக்கான போட்டி நிரல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இந்த வார நடுப்பகுதியில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# செக்குடியரசு வீராங்கனை சம்பியன்



(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பெட்ரா குவிட்டோவா சம்பியன் பட்டம் வென்றார். நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் செக்குடியரசின் பெட்ரா குவிட்டோவா, கனடாவின் பவுச்சார்ட் ஆகியோர் பலப்பரீட்சை நடாத்தினர். ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய குவிட்டோவா 6-3, 6-0 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்றார். 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிகக் குறுகிய காலத்திற்குள் (55 நிமிடம்) முடிந்த இறுதிப்போட்டி இதுவாகும்.

இதன்முலம் இரண்டாவது முறையாக விம்பிள்டன் பட்டத்தை வென்றுள்ளார் குவிட்டோவா. இதற்கு முன்பு 2011 இல் விம்பிள்டன் பட்டம் வென்றார். ஒட்டுமொத்தமாக இதுவரை 12 சம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளார்.

இந்த வெற்றி குறித்து குவிட்டோவா கூறுகையில், "எனது பயிற்சியாளரிடம் இருந்து சிறந்த ஆட்ட தந்திரங்களைக் கற்றுக்கொண்டேன். நான் எப்படி விளையாட வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். எனது அணியின் சக வீரர்களின் உதவியால் இப்போது கோப்பையை வென்றுள்ளேன். 3 ஆண்டுகளுக்குப் பின்னர் விம்பிள்டனில் பட்டம் வென்றது மிகவும் சிறப்பானது" என்றார்.

# புலிகளின் மீறல் சம்பவங்களை முன் வைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமை ஏற்க வேண்டும்

3

— டி.பி.எஸ்.ஜெயராஜ் —

ஐ.நா. விசாரணைக் குழு இலங்கைக்குள் வருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டதும், ஐ.நா. விசாரணைக் குழு அமர்வுகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு இடங்களுக்கு தாங்கள் சாட்சிகளுக்கு பாதுகாப்பாக செல்லப்போவதாக ரி.என்.ஏ தலைவர்கள் தெரிவித்தார்கள். ரி.என்.ஏ. மேலும் கேட்டுக் கொண்டிருப்பது ஐ.நா. விசாரணைக்கு சாட்சியம் அளிக்க விரும்புபவர்களுக்கு ஐ.நா. அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதுடன் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேணடும் என்று. இதில் சுவாரஸ்யமானது என்னவன்றால் குறிப்பாக ரி.என்.ஏ கோமாளிகள் மற்றும் பெதுவாக ஆர்வக்கோளாறு மிக்க தீவிரவாத புலம்பெயர் சக்திகள் என்பன உண்மையில் ஐ.நா. விசாரணையை ஒரு பக்க கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கிறார்கள். அதாவது ஐ.நா. விசாரணை ஒரு கட்சிக்கு மட்டுமே, பெயரளவில் இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் ஆயுதப் படைகளுக்கும் எதிராக மட்டுமே இருக்கப்போகிறது என்று கருதுகிறார்கள். தீர்மானம், அதே போல ஐ.நா. அதிகாரிகளின் அறிவிப்புகள் என்பன இரு தரப்பு பொறுப்புக்கூறலை சுமத்துவதற்கு கண்ணுக்கு தெரியக்கூடியவர்கள் எவருமில்லை என்பதன் அடிப்படையில்தான் இந்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இதனால் இரு தரப்பும் பரிசீலிக்கப் படும் என்கிற கருத்து வெறும் உதட்டளவில் சொல்லப்பட்டாலும், பொறுப்புக் கூறல் ஒரு புறமிருந்தாலும், நடைமுறையில் எல்.ரீ.ரீ.ஈ.யினை விசாரிப்பது அல்லது இரண்டு கட்சிகளினதும் என்று குறிப்பிட்ட போதிலும், ரி.என்.ஏ மற்றும் தீவிரவாத புலம்பெயர் சக்திகள் என்பனவற்றின் எதிர்பார்ப்பு கொழும்பு மட்டுமே இலக்கு வைக்கப் படப் போகிறது என்பதாக உள்ளது போலத் தெரிகிறது. உண்மையில் எல்.ரீ.ரீ.ஈ.யின் உயர் மட்டம் இப்போது இல்லை, மற்றும் இலங்கை மண்ணில் புலிகள் முற்றாக நிர்மூலமாக்கப் பட்டுவிட்டார்கள். அப்படியிருக்கும்போது அசாத்தியம் என்று கருதப்பட்டுள்ளது. விசாரணைக்கு எதிராக கொழும்பு எதிர்ப்பினை பின்பற்றுவது இந்த கருத்துக்கு மேலும் வலு சேர்க்கிறது. பயனுள்ள இலக்காக ராஜபக்ஸ அரசாங்கம்தான் இருக்கப்போகிறது, எல்.ரீ.ரீ.ஈ யோ அதன் எச்சங்களோ இல்லை என்பதை இந்த எதிர்ப்பு அடையாளம் காட்டுகிறது.

இந்த விடயத்தில் ரி.என்.ஏயின் கபட நாடகத்தை பற்றி இந்த பத்தி முன்பு ஒருமுறை சுட்டிக் காட்டியிருந்தது. ரி.என்.ஏ. இரு தரப்பு விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது என்பதை குறிப்பிட்டு, அப்போது இந்த பத்தி பின்வருமாறு தெரிவித்திருந்தது - "உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்கிற அளவுக்கு மீறிய ஆர்வம் குறிப்பாக ரி.என்.ஏ. மற்றும் பொதுவாக தமிழ் புலம் பெயர்ந்தவர்களிடையே ஏற்பட்டிருப்பதை குறிப்பாக வரவேற்க வேண்டும், ஆனால் எல்.ரீ.ரீ.ஈ.யின் நடத்தை என்று வரும்போது எதையும் சந்தேக கண்ணோடுதான் பார்க்க வேண்டும் என்பதை அறிவுறுத்தும் ஒரு சிட்டிகை உப்பே அதிகம் என்கிற உப்பு பற்றிய பழமொழியை கருத்தில் கொள்ளவேண்டிய அவசியமும் உள்ளது."

"உண்மையைச் சொல்லப் போனால், போரின் உச்சக் கட்டத்தின் போதும் எல்.ரீ.ரீ.ஈ.யின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் பொதுமக்களை விடுவிக்கும்படி, ரி.என்.ஏ ஒரு போதும் எல்.ரீ.ரீ.ஈ. யிடம் முறையீடு செய்யவில்லை, இப்போது அந்தக் கட்சி எல்.ரீ.ரீ.ஈ உட்பட இரு தரப்பினரதும் செயற்பாடுகளை பற்றி விசாரணைக்கு அழைப்பு விடுவதை நம்ப முடியவில்லை.

உண்மையில் சொல்வதானால், எல்.ரீ.ரீ.ஈ. சிறுவர்களை கட்டாய ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தியதையோ அல்லது ரி.என்.ஏ.யின் அரசியற் கூட்டாளிகளின் உன்னதமான உயிர்களைப் பறித்து அவர்களை கொடூரமாக படுகொலை செய்ததையோ இதுவரை கண்டிக்காத ரி.என்.ஏ. எல்.ரீ.ரீ.ஈ. உட்பட இரு தரப்பினரையும் பற்றி ஒரு சர்வதேச விசாரணைக்கு ஆதரவு தெரிவிப்பதை நம்புவதற்கு கடினமாக இருக்கிறது".

"மேலும் எல்.ரீ.ரீ.ஈ.யின் நடத்தையை பற்றி ரி.என்.ஏ. ஒரு விசாரணையை கோரும்பொழுது புலிகளுக்கு ஆதரவாக எளிதில் ஆவியாகும் சக்திகள் அதை குற்றமாக கருதாதது ஆச்சரியமாக உள்ளது, இல்லாவிடில் ரி.என்.ஏ.யின் நிலைப்பாட்டை அவர்கள் உண்மையில் தீவிரமாக எடுக்கவில்லையோ! இல்லையென்றால், இந்தியாவில் கெண்டக்கி பிறயிட் சிக்கன் கடைகளுக்கு முன்பாக அமெரிக்காவின் தீர்மானத்தின் கடுமை போதாது என்று ஆர்ப்பாட்டம் நடத்திய பைத்தியக்கார உதிரிக் கட்சியினர், ரி.என்.ஏ தலைவர்களின் கொடும்பாவியை எரித்திருக்க வேண்டும், ஆனால் உண்மையில் ஏமாற்று தோரணையை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

ஜெனிவாவில் புலிக்கொடியை காட்சிப் படுத்திய மூடர்கள் ஆதரவளிக்கும் சர்வதேச விசாரணை, என்பதில் குறிப்பிட்டுள்ள இரு தரப்புகளும் என்பது உண்மையில் ஆயுதப்படை மற்றும் எல்.ரீ.ரீ.ஈ என்பது நம்பக் கூடியதா? தர்க்க ரீதிப்படி அது நம்பக்கூடியதாக தெரியவில்லை! இன்னும் புலம் பெயர்ந்தவர்களிடையே உள்ள புலிகள் மற்றும் புலி சார்பு சக்திகள் அதே போல இலங்கையில் உள்ள அவர்களது சக பயணிகள் ஆகியோர் தங்கள் முயற்சிகளை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். ரி.என்.ஏ இருதரப்பு என்பதை தாழ்ந்த தொனியில் சொல்லி இந்தக் கோரிக்கைக்கு குரல் கொடுக்கிறது.

ஆகவே ஒரு அனுமானத்துக்கு வருவது சாத்தியமாகிறது. அதாவது ரி.என்.ஏ. யினர் அரசியல் சூழ்ச்சி மற்றும் மோசடி என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதில் அனுபவசாலிகள். அவர்கள் இப்போது இருதரப்பு விசாரணையைக் கோருவது எதனாலென்றால் தீவில் எல்.ரீ.ரீ.ஈ. இல்லாதிருப்பதால் அந்த நடவடிக்கை சாத்தியமற்றது என அவர்கள் எண்ணுகிறார்கள்.

மேலும் பப்படம் பொடியாகி விசாரணை ஆரம்பமாகும்போது தங்களது ஜனநாயக நல்லெண்ணங்கள் தங்களை எல்.ரீ.ரீ.ஈ. யிடம் இருந்து அன்னியமாக்க உதவும் எனவும் அவர்கள் நம்புகிறார்கள்.

(தொடரும்)




# ஏலத்தில் வாங்கக் கூடியதா சூப்பர் ஸ்டார் பட்டம்?

தமிழகத்தில் பிரபல வார இதழ் ஒன்று அடுத்த சூப்பர் ஸ்டார் விஜய் என கருத்துக் கணிப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து சூப்பர் ஸ்டார் பட்டம் குறித்த சர்ச்சை மீண்டும் வெடித்தது.

பல வருடங்களுக்கு முன்பு சூப்பர் ஸ்டார் நாற்காலி எனக்கு வேண்டும் என்றார் அஜீத். அப்போதும் இதேபோல் சர்ச்சைகள் எழுந்தன.

அடுத்த சூப்பர் ஸ்டார் என்று ஏதாவது நடிகரின் பெயரை முன்மொழியும் போதெல்லாம் நாலா திசைகளிலிருந்தும் கருத்துகள் வீசப்படும்.

தொகுத்துப் பார்த்தால் எல்லாமே இரு விஷயங்களில் மையம் கொண்டிருப்பதை பார்க்கலாம்.

1. அடுத்த சூப்பர் ஸ்டாராக ஆசைப்படுகிறவர்கள் ஏன் அடுத்த மக்கள் திலகமாகவோ, நடிகர் திலகமாகவோ ஆசைப்படுவதில்லை?

2. தமிழ்த் திரையுலகில் ஒரே சூப்பர் ஸ்டார்தான். அது அன்றும் இன்றும் என்றும் ரஜினிகாந்த்.

சூப்பர் ஸ்டார் என்பது ஒரு பொது அடைமொழி. ரஜினிகாந்த் சூப்பர் ஸ்டாராக முன்வைக்கப்படுவதற்கு முன்பே இந்த அடைமொழி புழக்கத்தில் உள்ளது. விளையாட்டு மற்றும் கலைத்துறையில் சாதனை படைத்து புகழுடன் இருப்பவர்களை சூப்பர் ஸ்டார் அடைமொழியுடன் விளிப்பது மரபு. இந்தப் பட்டம் காலத்துக்கேற்ப ஆட்களை மாற்றிக் கொள்ளும்.

முன்பு ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் சூப்பர் ஸ்டாராக கொண்டாடப்பட்டவர் மரடோனா. இன்று ஆர்ஜென்ரீனாவின் சூப்பர் ஸ்டார் மெஸ்ஸி. எழுத்தாளர் சுஜாதாவை அவரது வாசக ரசிகர்கள் எழுத்துலகின் சூப்பர் ஸ்டார் என்று குறிப்பிடுகின்றனர்.

சினிமாவை எடுத்துக் கொண்டால் ஆசியாவின் சூப்பர் ஸ்டார் ஜாக்கிசான். ஹிந்தியில் அமிதாப்பச்சன். மலையாள சூப்பர் ஸ்டார்கள் என கேரளாவிலுள்ள ஊடகங்கள் குறிப்பிடுவது மம்முட்டியையும், மோகன்லாலையும்.

ஸ்டாருடன் இணைத்து வரும் எல்லா பட்டங்களும் - லக்கி ஸ்டார், பவர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார், மெகா ஸ்டார் - பல நபர்களால் பயன்படுத்தப்படுபவை. இதில் அனைத்து ஸ்டார்களையும் விட உயரத்தில் இருப்பது சூப்பர் ஸ்டார்.

மக்கள் திலகம், நடிகர் திலகம், இளைய தளபதி எல்லாம் மேலே சொன்ன ஸ்டார் பட்டங்களிலிருந்து மாறுபட்டவை. ஒருவரை மட்டும் குறிக்கும் தனித்துவமிக்கவை. எழுத்துலகின் மக்கள் திலகம் என்றோ, கிரிக்கெட்டின் நடிகர் திலகம் என்றோ குறிப்பிட முடியாது.

இந்த வித்தியாசம் காரணமாகத்தான் மற்ற பட்டங்களை விடுத்து சூப்பர் ஸ்டாரின் பின்னால் நடிகர்கள் அணிவகுக்கிறார்கள். அடுத்த சூப்பர் ஸ்டாராக வேண்டும், சூப்பர் ஸ்டார் நாற்காலி எனக்குத்தான் என்பதெல்லாம் எல்லோரையும்விட சாதனை படைத்தவனாக, பிரபலமானவனாக வேண்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடு.

தமிழ் திரையுலகில் எட்ட முடியாத உயரத்தில் இருப்பவர் ரஜினிகாந்த். அவரது இடத்தை குறிவைத்து இளம் நடிகர்கள் தங்களை உத்வேகப்படுத்திக் கொள்வதன் புற வெளிப்பாடுதான் சூப்பர் ஸ்டாராக வேண்டும் என்ற அவர்களின் ஆசை. அதனைப் பெரிதாகக் குறை கூற எதுவுமில்லை.

ரஜினிகாந்தின் அளப்பரிய மக்கள் செல்வாக்கும், ரசிகர்களின் அன்பும், இளைஞர்களின் ஐகொன், எளிமையின் வடிவம் போன்ற அவரைப் பற்றிய ஊடக பிம்பங்களாலும் சூப்பர் ஸ்டார் என்றால் அது ரஜினிகாந்த் மட்டுமே என்ற எண்ணத்தை தமிழரிடத்தில் ஆழப் பதிய வைத்துள்ளது. அதனை அத்தனை சுலபமாக யாராலும் பிடுங்கி எறிய முடியாது. இதனை நன்கு தெரிந்து வைத்திருக்கும் ஊடகங்கள் மக்களின் கவனத்தை தங்கள் பக்கம் திருப்ப எதிர்கால சூப்பர் ஸ்டார், வருங்கால சூப்பர் ஸ்டார் என அவ்வப்போது கரடிவிடும்.



ரஜினிகாந்த் இருக்கும்வரை தமிழகத்தில் சூப்பர் ஸ்டார் என்றால் ரஜினிகாந்த் என்பதில் எந்த மாற்றமும் வரப்போவதில்லை. அவருக்குப் பிறகும் நெடுநாளைக்கு சூப்பர் ஸ்டார் நாற்காலியில் யாரும் எளிதில் அமர்ந்துவிட முடியாது என்பதையே ரஜினியின் மக்கள் செல்வாக்கு நமக்கு உணர்த்துகிறது.

எந்த ஒரு பட்டமும் மனிதனுக்கு மகத்துவத்தை தந்துவிடாது. மனிதர்களின் மகத்துவமே அவர்கள் சுமக்கும் பட்டத்தை கௌரவப்படுத்துகிறது. ஆந்திராவில் பவர் ஸ்டார் என்றால் பவன் கல்யாணின் ரசிகர்கள் ஆர்ப்பரிப்பார்கள். திரையரங்குகளில் கூட்டம் அம்மும். அதே பவர் ஸ்டார் பட்டத்துடன் தமிழிலும் ஒரு நடிகர் இருக்கிறார். ஒரே பட்டம் என்பதற்காக பவன் கல்யாணுக்கு கிடைக்கும் வரவேற்பு இங்குள்ள நடிகருக்கு கிடைத்துவிட்டதா?

காகிதத்தை ரோஜா என்றழைத்தாலும் அது மணக்கப் போவதில்லை. ரோஜாவை காகிதம் என்றாலும் அது மணக்காமல் இருக்கப் போவதில்லை. மனிதர்களால்தான் பட்டங்கள் மகிமை பெறுகின்றனவே தவிர பட்டங்களால் மனிதர்கள் மகத்துவம் எய்துவதில்லை. இந்த எளிய உண்மையை எதிர்கால சூப்பர் ஸ்டாராக விரும்பும் இளைய தலைமுறை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தமுறை பட்டம் குறித்து சர்ச்சை எழுகையில், பெயரில் என்ன இருக்கிறது என்று கடந்துபோக ஊடகங்களும், மக்களும் பழகிக் கொள்ள வேண்டும்.

(வெப்துனியா)

யாழ். கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் கழிவகற்றல் திட்டம் தொடர்பில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சினால் கொழும்பில் கருத்தரங்கொன்று இம்மாதம் முதலாம் திகதி இடம்பெற்றது.

அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஆகியோருடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும்





# பேச வேண்டும் என்பதற்காக பேசுவதா?

— யாழ். கண்ணன் —

பெருவாரியான படித்த சமூகத்தினர் மற்றும் உயர் தகைமையாளர்கள் பலரும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் இரணைமடு யாழ். குடிநீர்த்திட்டம் தொடர்பாகவே பெரிதும் ஆராயப்பட்டது.

பங்குகொண்டோர் அனைவரும் தத்தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் தெரிவித்துக் கொண்டிருந்த சமயம் வழமை போலவே மூக்கை நுழைத்த சிறிதரன் எம்.பி போட்டார் ஒரு போடு. வயலுக்கு வீசப்படும் பசளைகள், விலங்குக் கழிவுகள் என்பன கனகராஜன் ஆற்றினூடாக இரணைமடுவில் வந்து கலக்கின்றது. அதனை எவ்வாறு குடிப்பது?

இதுதான் அவர் போட்டபோடு. அவருக்கு சரிபக்கத்தில் அமர்ந்திருந்த சுமந்திரன் எம்.பியின் முகத்தில் ஈயாடவில்லை. சம்பந்தனோ ஒருபடி மேலே போய் தனதருகில் அமர்ந்திருந்த சுரேஷ் எம்.பியுடன் இறுகின முகத்துடன் என்ன குசுகுசுத்தாரோ தெரியாது.

நல்லகாலம் அதில் பங்குகொண்ட அறிவுஜீவிகளில் பலருக்கு தமிழ் விளங்கியிருக்கவில்லை. இல்லாவிட்டால் யாழ்ப்பாண மக்கள் தெரிவுசெய்த எம்.பியின் இலட்சணம் விளங்கியிருக்கும்.

ஐயா சிறிதரன் அவர்களே! இன்னும் எவ்வளவு காலத்திற்கு கி(ளிநொச்சி)ணற்று தவளையாக இருக்கப் போகின்றீர்கள்? இன்று கொழும்பு பெரும்பாகத்தில் (கட்டுநாயக்கா முதல் மொரட்டுவை வரை) உள்ள மக்கள் குடிப்பது களனி ஆற்றுத் தண்ணீர் என்பது உங்களுக்குத் தெரியாதா? ஏன் நீங்கள் கூட கொழும்பு வருபோது பந்தாவாக மினரல் போத்தல் தண்ணீர் குடிக்காவிட்டால் குடிப்பது அதே களனி தண்ணீர்தான்.

கனகராஜன் ஆற்றினூடாக பசளையும் மிருகக்கழிவும்தான் வருகின்றது. ஆனால் களனி ஊடாக மலையகத்தில் எஸ்டேட் மனித க... வேண்டாமய்யா வேண்டாம். நீர்வழங்கல் சபை என்ன பவுசரில் அப்படியே உறிஞ்சி எடுத்தா குடிக்கக் கொடுக்கின்றது? அம்பத்தனை, களத்துவேவா என்ற இடங்களுக்கு இயலுமென்டால் உங்கட பஜிரோ கூலரில ஒருக்கா போய்ப்பாருங்கள்.

எத்தனை பிரமாண்டமான தாங்கிகள்! அதில் எவ்வளவு சுத்திகரிப்பு நடவடிக்கைகள். பொதுமக்களை குடிநீர் சென்றடையுமுன்னர் தொழில் நுட்பவியலாளரின் இறுதிக்கட்ட பரிசோதனை நடவடிக்கைகள். இவ்வளவும் நடந்தபின்னர்தான் கொழும்பு வீட்டு பைப்புகளுக்கு தண்ணீர் வருகின்றது.

இதே நடவடிக்கைகளை இரணைமடு தண்ணீரிலும் மேற்கொள்ளத்தானே ஆசிய அபிவிருத்தி வங்கி ஏறத்தாழ ரூபா 23,000.00 மில்லியன் (US$ 164.00 மில்லியன்) பெருந்தொகைப் பணத்தினை ஒதுக்கியுள்ளது. திட்ட அறிக்கைகளைப் பாருங்கள் அதன் முழு விபரம் புரியும்.

அதுசரி எனக்கொரு சந்தேகம். இவ்வளவு காலமும் கிளிநொச்சி வயலுக்கே தண்ணி இல்லை பிறகு எப்படி யாழ்ப்பாணத்திற்கு தண்ணி அனுப்புறது எண்டு முதலமைச்சரின் எதிர்ப்பையும் மீறி போர்க்கொடி எழுப்பினீங்கள். இப்ப என்னெண்டு திடீரெண்டு யாழ்ப்பாண மக்கள் ஊத்தை தண்ணி குடிக்கக்கூடாது எண்ட கரிசனை வந்தது?

வருகிற பாராளுமன்ற தேர்தலில யாழ். தொகுதியில ஆறு எம்பிமார்தானாம். கிளிநொச்சி விவசாயிகளையும் சனத்தையும் குழப்பிவிட்டு வாக்குகை அள்ளலாம் எண்டால் ஒருவேளை அது காணாட்டில் எண்டபடியால்தான் ஊத்தை தண்ணி கதை சொல்லி யாழ்ப்பாண சனத்தையும் குழப்பி வாக்கு எடுக்கலாம் எண்டு நினைச்சீங்களோ?

போன 26ஆம் திகதி யாழ்ப்பாணத்தில நடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்தான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. தமிழ்நாட்டில ஜெயலலிதாவால கடலில இருந்து குடிநீர் குடிக்க முடியுமெண்டால் ஏன் இஞ்ச முடியாது? எண்டு ஒரு போடுபோட்டியள். அதே போட இந்த கொழும்பு கூட்டத்திலையும் போடுவியள் எண்டுதான் எதிர்பார்த்தன். ஆனால் நீங்கள் பேசுறதுக்கு முதலே வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா அதுக்கு ஆப்பு வைச்சிட்டார். ஜெயலலிதா பொதுமக்களுக்கு அல்ல, தொழிற்பேட்டைகளுக்கு மட்டும் அதுவும் உற்பத்திச் செலவு ஒரு கன மீற்றருக்கு இந்திய ரூபா 48.66 படிதான் குடுக்கிறா. ஆனால் இரணைமடு தண்ணி யாழ்ப்பாணம் கொண்டுபோக இலங்கை ரூபா 7.97தான் முடியுது எண்டு எடுத்துக் காட்டினார்.

கிளிநொச்சி நீர்த்தேவை போக மீதியே யாழ்ப்பாணத்துக்குப் போகும் எண்டு கூட ஆரம்பத்திலேயே திட்டப்பணிப்பாளர் கூறிவிட்டார். கடல்நீர்த் திட்டத்துக்கும் தவராசா ஆப்பு வைச்சிட்டார். வேற என்ன? பசளை, மிருகக்கழிவு கதையை சொல்லி ஒருமாதிரி அவசர அவசரமாக ஒப்பேத்திப் போட்டீங்கள்.

ஐயா இது கிளிநொச்சி, யாழ்ப்பாண மக்களின் விவசாய - குடிநீர் வாழ்வாதாரப் பிரச்சினை. தயவுசெய்து பேசவேணும் எண்டதுக்காக பேசாதையுங்கோ.

# இந்திய அரசு இலங்கையை அரவணைத்துச் செல்லுமா?

— வே. அர்ச்சுனன் —

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவில், இடையிடையே இராஜதந்திர ரீதியிலும் மறைமுகமான உறவு முறிதல்கள் ஏற்படுவது வழமையானது. ஆனாலும் இந்தியாவும் இலங்கையும் தங்களுக்கிடையிலான உள்ளகப் பகைமைகளை மறந்து ஒன்றை ஒன்று அரவணைத்துச் செல்லும் கடப்பாட்டையே இதுவரை பேணி வருகின்றன.

ராஜீவ், ஜே.ஆர் ஒப்பந்தம் மூலம் ஈழத்தமிழர்களுக்கு ஒரு தீர்வு யோசனையை இந்தியா முன்வைத்ததுடன் அதை நடைமுறைப்படுத்துவதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்ட ஜே.ஆர் அரசாங்கம் இந்தியாவின் எண்ணப்படி அதை செயற்படுத்துவதற்கும் முன்வந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அந்த ஒப்பந்தத்தில் தமிழர்களுக்குரிய தீர்வின் முழுமையான வடிவம் அடங்கவில்லை என்று குறிப்பிட்டதுடன் இந்திய அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்தியும் போராடத் தொடங்கினர்.

இது ராஜீவ் காந்தியின் படுகொலை வரை சென்று ஈழத்தமிழர்களுக்கும் இந்திய அரசிற்கும் இடையில் பெரும் இடைவெளிகளை ஏற்படுத்தியதுடன், இந்திய விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக அறிவித்து, அவர்களை அழிக்கின்ற இறுதிக்கட்ட செயற்பாட்டிற்கும் இலங்கைக்கு கைகொடுக்கின்ற அளவிற்குச் சென்றது.

ஆனாலும் இலங்கையானது தனியே இந்தியாவை மட்டும் நம்பாமல் சீனாவிடம் இருந்தும் பாகிஸ்தானிடம் இருந்தும் தனக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுவருகிறது. இந்தியாவுக்கு இவை உவப்பானதில்லை என்பது வெளிப்படையானது.

மோடி தலைமையிலான இந்திய அரசானது இலங்கைக்கு எதிராக செயற்பட்டு தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்குகின்ற அளவிற்கு இலங்கை தொடர்பில் இறுக்கமான போக்கை கடைப்பிடிக்கும் என பல தமிழ் ஆய்வாளர்கள் எதிர்வு கூறிய போதிலும் இந்தியாவானது இலங்கையை நேரடியாகவோ மறைமுகமாகவோ பகைக்கின்ற மனோநிலையில் இல்லை என்பது அதனுடைய நகர்வுகளிலிருந்து வெளிப்பட்டு நிற்கிறது.

சமரசமாக பேசி இலங்கையின் இறையாண்மையை மதித்தவாறு தமிழர்களுக்கு ஒரு தீர்வை வழங்கவேண்டுமென்ற ஆலோசனையையே இந்தியா வலியுறுத்தி வருகிறது. மறுபுறத்தில் தென்னாசிய வட்டகைக்குரிய வல்லாதிக்கத்தை சீனாவுடன் போட்டிபோட்டு பேணுவதற்கு இலங்கை போன்ற நாடுகளுடன் நட்புறவை பேணவேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.



இதனால் இராஜதந்திர ரீதியாக மோடி அரசும் இலங்கை அரசும் பல்வேறு கருத்தாடல்களை மேற் கொண்டு வருவதுடன் கடற்பாதுகாப்பில் புதிய பொறிமுறை ஒன்றையும் தற்போது கூட்டாக உருவாக்கி உள்ளன. இந்தப் பொறிமுறையின் முக்கிய விடயங்கள், உண்மையான நோக்கம் என்பன அம்பலத்திற்கு வராத போதிலும் சில விடயங்கள் தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.


கடத்தல், ஊடுருவல், இருநாடுகளின் கடல் எல்லைகள் மற்றும் கடற்தொழிலாளர்களின் பாதுகாப்பு விடயங்கள் இப்பொறிமுறையில் உள்ளடக்கப்படும் எனவும் இதன் முதற்கட்டமாக இரு நாடுகளினதும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சந்திப்பொன்றை நடத்தி முடித்துவிட்டதாகவும், டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தது.

இந்திய கடலோர பாதுகாப்பு தலைமை அதிகாரி அனுரக் தப்லியால் மற்றும் இலங்கையின் கடலோரப் பாதுகாப்பு படைத் தலைவர் ரவீந்திர விஜயகுணரத்ன ஆகியோருக்கிடையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றதாகவும். இதன்போது இலங்கை இந்திய கடற்பரப்பின் பாதுகாப்பு தொடர்பிலான ஒத்துழைப்புகளை வலுப்படுத்த இணங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை த ஏசியன் ஏஜ் பத்திரிகை, மோடி அரசின் ஒரு மாத பூர்த்தி குறித்து அண்மையில் ஆய்வு ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை தொடர்பில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் பிரயோகிக்கின்ற அழுத்தங்களுக்குத் தம்மை சிக்கவைத்துக்கொள்ள ஒருபோதுமே விரும்பமாட்டார் என்றும் இலங்கையில் கைது செய்யப்பட்டிருந்த மீனவர்களை விடுவிக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் இரண்டு கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும் பிரதமர் அலுவலகத்திலிருந்து எந்தவொரு பதிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை ஆனால் மீனவர்களை விடுவிக்க இரண்டு அரசுகளும் ராஜதந்திர ரீதியிலான செயற்பாடுகளை மேற்கொண்டு மீனவர்களை விடுவித்து வருகின்றமையை சுட்டிக்காட்டியுமுள்ளது.

ஆக, இலங்கையும் இந்தியாவும் தங்களுக்கிடையில் முட்டி மோதுவதை தவிர்க்கவே விரும்புகின்றன. ராஜதந்திர ரீதியிலான காய் நகர்த்தல்கள் ஊடாக இரண்டு அரசுகளும் ஒன்றுக்கொன்று உடன்பாட்டுடன் செயற்படக்கூடிய திறன்களையே பேண முற்படுகின்றனர். இலங்கை சீனாவின் பக்கம் செல்வதை முழுமையாக தடுக்கும் தேவை இந்தியாவுக்கு உள்ளது. எனவே எந்த வழியிலாவது இலங்கையை அரவணைத்துச் செல்கின்ற பாதையையே இந்தியா தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் உள்ளன.






பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் திருமதி ராகினி ஆனந்தராசாவுக்கான பிரிவுபசார விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இதில் ஆசிரியர் கல்விச் சமூகத்தால் வரவேற்கப்படுவதையும் அதிபர் உரையாற்றுவதையும் மாணவி ஆசிரியரைக் கௌரவிப்பதையும் காணலாம். (01)




# நிகழ்வுகளின் பதிவுகள்....


நல்லூர் றோட்டரிக் கழகத்தின் 2ஆவது சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்றபோது....




முழங்காவில் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது.... (36)



இலங்கை வங்கி பருத்தித்துறை கிளையில் மூத்த பிரஜைகளுக்கான சேமிப்பு கணக்கில் பணம் வைப்பிலிட்டு அதிர்ஸ்டசாலியான திருமதி. ஈஸ்வரி தங்க நாதனுக்கு இலங்கை வங்கி வடபிராந்திய முகாமையாளர் ரி.குமார் மருத்துவ உபகரணங்களை வழங்குவதைக் காணலாம். (01)



ஆடியபாதம் வீதி நல்லூர் அருள்மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலனசபை அண்மையில் நடாத்திய பரிசளிப்பு விழாவில் இடம்பெற்ற மாணவிகளின் நடன நிகழ்வைக் காணலாம். (எஸ்.பி)




மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த நாடக விழா கல்லூரியின் வி.எஸ். துரைராஜா திறந்த வெளிஅரங்கில் கல்லூரி அதிபர் எஸ். சிவநேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் நாடக குழுவினரையும் காணலாம். (63)

# இளைஞர் திறன் விருத்திக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் விளையாட்டுக்கழகங்களின் மேம்பாட்டுக்காகவும் இளைஞர்களின் திறன் விருத்தியை மேம்படுத்தவும் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான செயற்பாடுகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் இளைஞர்களின் திறன் விருத்தியை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளின் ஒரு உச்சக்கட்டமாகவே விளையாட்டுத்துறைசார்ந்த நிகழ்வுகள் அமைகின்றன.

அண்மையில் வடக்கு மாகாணத்தில் பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளை பெற்றிருக்கின்றார்கள். இது கிளிநொச்சி மாவட்டம் மீண்டும் விளையாட்டுத்துறையில் ஆழத்தடம் பதிக்கத் தொடங்கியுள்ளது என்பதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் விளையாட்டுத்துறையில் மேன்மையை எட்ட வைக்கும் என நான் கருதுகின்றேன் என்றார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்டத்தின் 26ஆவது மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது

இந் நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சரத் சந்திரபால தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய சம்மேளனத்தின் பொருளாளர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் பெரேரா, இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் திட்ட முகாமையாளர் வேல்குமார், முல்லைத்தீவு மாவட்டத்தின் இளைஞர் சேவை அதிகாரி சறோஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயவீர தென்னக்கோன், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# கலை மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலை போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றம் கலை பண்பாட்டுப்பெருவிழாவை முன்னிட்டு நடாத்திய பேச்சு, கட்டுரை, ஆக்கத்திறன், சித்திரம் போன்ற போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு.

**ஆரம்பப்பிரிவு பேச்சு**

க.யசோபிகா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), க.பர்மிலா, த.பவீனா (இடைக்காடு மகா வித்தியாலயம்)

**கீழ்ப்பிரிவு பேச்சு**

ப.கிருஷாணி (அச்சுவேலி மத்திய கல்லூரி), ர.ராகவி (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), வே.கவிஸ்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)

**மத்திய பிரிவு-பேச்சு**

சி.பவதாரணி சி.லக்ஷனா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), ஜி.தரன்சிகா (இடைக்காடு மகாவித்தியாலயம்)

**மேற்பிரிவு பேச்சு**

க.சுவர்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்),வே.இந்துஜா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), க.கல்மன் (அச்சுவேலி மத்திய கல்லூரி).

**அதிமேற்பிரிவு பேச்சு**

வே.கிருஸ்ணவி, இ.லோகிதா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), ம.ஆரபி இடைக்காடு மகாவித்தியாலயம்).

**ஆரம்பப்பிரிவு ஆக்கம் எழுத்து**

த.வேணுஜா (இடைக்காடு மகாவித்தியாலம்), மா.வித்தியா, இ.சாயினி (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி)

**கீழ்ப்பிரிவு கட்டுரை**


வி.லக்ஷனா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சோ.சுபஸ்திகா, (அச்சுவேலி மத்திய கல்லூரி), செ.கிருஷ்ணா (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்).

**மத்திய பிரிவு கட்டுரை**

சி. சிவலோஜி (அச்சுவேலி மத்திய கல்லூரி) ஸ்ரீ.சியானி (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), ம.பூர்விகா (இடைக்காடு மகாவித்தியாலயம்), ர.கீர்த்தனா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

(85) (தொடரும்....)

# "இசையின் முகங்கள்" இசைப்பாடல் இறுவட்டு வெளியீடும் பரிசளிப்பு விழாவும்



மானிப்பாய் இந்துக்கல்லூரியின் காண்பிய ஊடகக் கழகத்தினரால் 'இசையின் முகங்கள்' இசைப்பாடல் இறுவட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வி.எஸ்.துரைராஜா திறந்தவெளி அரங்கில் கல்லூரி அதிபர் எஸ்.சிவநேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற போது இமயத்தை வென்ற இனிய தமிழ் நூறுவயதிலும் இளமை வழிந்தோடும் ஞானச்சுரங்கம் எங்கள் கல்லூரி ஆகிய இரண்டு பாடல்கள் அடங்கிய இசையின் முகங்கள் இறுவட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இறுவட்டிற்கான பாடல் வரிகளினை பி.ஜெயரூபன்,பாடல் வரிகளின் மேற்ப்பார்வையினை ம. பாலசுப்பிரமணியம், வழிகாட்டல் ஆலோசனையினை காண்பிய ஊடகக்கழகப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன்,பாலுக்கான இசையினை ரி.மதீசன், ஒளிப்பதிவு சப்தமி ஒளிப்பதிவுக் கூடம் கோ.சத்தியன், தயாரிப்பினை எஸ்.நிஜந்தன் , ஜி.றொசான பாடலினை ஜி.யோசுவாபிரசாந், ஜே.திசாங்கன், ஜே.கலிங்டஸ் ஆகியோர் பாடியுள்ளனர். (63)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

கண்டியில் இயங்கும் திருவள்ளவர் நற்பணி மன்றம் என்னும் அமைப்புக்கு லிகிதர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கணனி பயிற்சி விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதி உண்டு. வேதனம் பேசித்தீர்மானிக்கலாம். விண்ணப்பிக்க, எஸ். Murugaiah (அமைப்பாளர்) 59, Kinge Street, kandy.

---

கண்டியில் தனிமையில் வசிக்கும் எனது தாயாருடன் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 20 வயதிற்கு மேற்பட்ட நம்பிக்கையான பணிப்பெண் ஒருவர் தேவை. (வீட்டில ஒருவரைப் போல இருப்பதற்கு) 0814945224, 0772138364.

---

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வரும் பணியாட்கள் தேவை. இயந்திர இயக்குநர்கள், இயந்திர உதவியாளர்கள், இயந்திர வேலை பழக விரும்புபவர்கள் Kord, Sord ஆகிய அச்சு இயந்திரங்கள் இயக்கக் கூடிய முன் அனுபவம் வாய்ந்த ஆண் பணியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தேகஆரோக்கியம் உடையவராகவும், இரவு பகல் பணியாற்றக் கூடியவர்களாகவும், பத்திரிகைத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்புக்கு: 0212223628, 0777193264.

---

நாங்கள் மூன்று வருடத்திற்கு கனடா செல்லஇருப்பதினால் தனிமையில் இருக்கும் எங்கள் அம்மாவிற்கு சமைத்துக்கொடுத்துவீட்டை பராமரிப்பதற்கு மிகவும் பொறுப்பான பணிப்பெண் ஒருவரை மாத்திரம் எதிர்பார்க்கின்றோம். சம்பளம் 17,000 தொடர்புக்கு 0112363276, 0752994001.

---

மூவர் அடங்கிய சிங்கள குடும்பத்திற்கு நாங்கள் காரியாலயத்திற்கு செல்வதினால் வீட்டை சுத்திகரிப்புச் செய்துகொண்டு வீட்டில் ஒருவரை போலிருக்க 18 வயதிற்கு மேற்பட்ட தமிழ்ப் பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க்கின்றோம். சம்பளம் 16,000-22,000 வரை வழங்கப்படும். தொடர்புக்கு 0777717787.

---

தொழில் அடிப்படையில் 32,000 மேல் மாத சம்பளம் பெறமுடியும். உடன் தொடர்புக்கு முந்துங்கள் 17-50 வயதினர் இருபாலாரும் தேவை. ஜேம், சொக்லட், பிளாஸ்டிக் கிலாஸ், கிலவுஸ் ஆர்பிக்கோ, கார்கில்ஸ், கீல்ஸ், கார்மன்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல், பொதியிடல் ஏற்றுமதி இறக்குமதி பிரிவுகளில் வெற்றிடம் உண்டு. (உணவு, தங்குமிடம், இலவசமான தொழிற்சாலைகளும் உண்டு. குறைந்த விலைகளிலும், வசதி செய்து தரப்படும். (வடமேல் வடகிழக்கு, சப்ரகமுவ, ஊவா) மலையகம், கொழும்பு விரும்பத்தக்கது. வரும் நாளிலேயே வேலைவாய்ப்பு நண்பர் குழுவினர் ஒரேதொழிற்சாலைகளில் 0778430179.

---

பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை பிரின் செகுரிடாஸ் பாதுகாப்பு பிரத்தியேக நிறவனத்திற்கு 18 வயது தொடக்கம் 55வயது வரை நல்ல உடற்கட்டும், நல்ல தோற்றமும் கொண்ட சிங்களம், ஆங்கிலம் பேசக்கூடிய நபர்கள் தொழிற்சாலை களஞ்சியசாலை, பிரத்தியேக குடியிருப்புக்கள் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் உடனடியாகத் தேவை. மாதச் சம்பளம் 25,000 இற்கு மேல் தங்குமிட வசதி, உணவு குறைந்த விலையில் பெற்றுத்தரப்படும். கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் வார நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை கீழ்க் காணும் விலாசத்திற்கு சமூகமளிக்கவும் பிரின்செகுரிடாஸ் பிரைவேற் லிமிட்டெட் இல754, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை பத்தரமுல்லை. 0773733201.

---

களுபோவில வீடு ஒன்றில் தங்கி வேலை செய்ய பெண ஒருவர் தேவை. சம்பளம் 15,000-18,000 வரை தொடர்புக்கு 0771623241.

---

CDB வங்கியில் சந்தைப்படுத்தல் அதிகாரி உதவி சந்தைப்படுத்தல் அதிகாரி ஆகிய பதவிகளுக்கு வேலை வாய்ப்பு 20-25வயதெல்லையுடன் க.பொ.த (உ/த)சித்தி பெறவேண்டும். அத்துடன் முன் அனுபவமிக்கவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும் தொடர்புக்கு முகாமையாளர் 0212221585, 0777584634.

# காணி அனுமதிப்பத்திரங்கள் 9 பேருக்கு வழங்கல்

வவுனியா பிரதேச செயல கப்பிரிவில் காணி அனுமதிப்பத் திரங்கள் , வழங்கப்படாதிருந்த ஒன்பது பேருக்கு நேற்றுமுன் தினம் காணி அனுமதிப்பத்திரங் கள் வவுனியா பிரதேச அபிவி ருத்தி குழுக் கூட்டத்தின் போது வழங்கி வைக்கப்பட்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினால் வவுனியா பிரதேச செயலகத்தில் மேற்கொள் ளப்பட்ட வேலைத்திட்டத்திற்கு அமை யவே இவ் அனுமதிப்பத்தி ரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

காணி கச்சேரிகள் மற்றும் நடமாடும் சேவை மூலம் கிடைக் கப்பெற்ற 25,163 காணி தொடர்பான விண்ணப்பங்களில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள் ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு இவ் அனுமதிப்பத்திரங்கள் வழங் கப்பட்டதாக வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தெரி வித்தார்.

இவ் அனுமதிப்பத்திரங்களை வர்த்தக கைத்தொழில் அமைச் சரும் வவுனியா அபிவிருத்தி குழுத் தலைவருமான ரிசாட் பதி யுர்தீன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், முத்தலிபாபா பாரூக், வட மாகாண சபை உறுப்பினர் களான எம். தியாகராஜா, எஸ். ஜெயதிலக ஆகியோர் வழங்கி வைத்தனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்து புறாப்பொறுக்கியில் 4 பேர் காயம்

யாழ். கரவெட்டி புறாப் பொறுக்கி பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேற்று முன்தினம் இரவு நேருக்கு நேர் மோதியதில் நால்வர் படுகா யமடைந்து வைத்தியசாலை களில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

சுழிபுரம் பகுதியினைச் சேர்ந்த தங்கராசா றேக்குமார் (வயது26), கொற்றாவத்தையி னைச் சேர்ந்த பொன்னையா கங் காதரன் (44), கரவெட்டியினைச் சேர்ந்த கந்தசாமி ரவீந்திரன் (வயது20), அல்வாய் மேற்கி னைச் சேர்ந்த தேவராசா லோறன்ஸ றெஜிகரன் (வயது 33) ஆகியோரே படுகாயமடைந் தனர்.

இவர்களில் ஒருவர் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை யிலும், மற்றைய மூவரும் யாழ். போதனா வைத்தியசாலை யிலும் அனுமதிக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



# பரமர் சங்கமம்

“அவ தந்திரம் தனக்கு அந்தரம் எண்டும் சொல்லுவினம் இதெப்படிப் பட்டது காகம் பாட்டீட்டை அவ தந்திரமாகத திருடிச் சென்ற வடையை நரிப்பிள்ளையும் அதே தந்திரத்தை கையாண்டு காகத் திடம் இருந்து வடையைக் கொண்டு போனது போலை தான் இருக்கும நரியாரும் ஆரிட்டேம் கோட்டை விடுவார் விடு வாரெல்லோ?

நேர்மையாக எதையும் கையாளாமல் அவதந்திரத்தில் சிலரிடம் இருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கும் இதேகெதிதான் நேர்வதைப் பரவலாகக் கண்டு கொண்டுதான் இருக்கிறம்.

நாவாந்துறையைச் சேர்ந்த நபர் இப்ப கனடாவில் பிச்சைச் சம்பளம் வாங்கி அதில் அடிக்கடி ஊருக்கு வந்து போவார். இவருக்கொரு பொம்பிளைப் புள்ளை செத்தது அதின்ரை நினைவா ஊரிலை ஒரு நூல் நிலையம் வீட்டு விறாந்தேலை வைச்சிருக்கிறார்.

கம்பியூனிட் கட்சி உறுப்பினரான இவர் மக்கள் எழுத்தாளர் டானியலின் வெலிங்டன் சந்தி கராஜில் சந்தித்து பழகிய ஒரு எழுத்தாளரிடம் நூல் நிலையத்துக்கு சில நூல்களை அன் பளிப்பாகக் கேட்டிருந்தார். நாற்பது நூல்களை அவ்வெழு தாளர் நூல் நிலையத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்.

கனடாவில் இருந்து இடைக்கிட வந்து போகையில் அந்த எழுத்தாளரின் இருபத்தைந்து புத்தகங்களை கனடாவில் டொலர்களில் வித்து உதவுவதாக 2005 ஆம் ஆண்டு வந்து போகையில் வாங்கிப் போனார்.

டொலர்களில் சேரும் பணத்தில் மற்றொரு நூலை வெளியி டலாமெண ஆசை காட்டி வாங்கிச் சென்றவர் இதுவரை ஐந்து தடவைக்கும் மேலாக இங்கே வந்து போய் விட்டார் அந்தப் புத்தகங்களுக்கான கணக்கை முடிக்கவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக கனடாவில் வேலைத் தளத்தில் உயரத்தில் இருந்து இவரது மகன் வீழ்ந்து உயிரிழந் தார் 2012 ஆம் வருட இறுதியில் வந்து பல இலட்சம் ரூபா செலவில் மகனது நினைவாக நாவாந்துறையில் தசைப் பயிற்சிக்களரி ஒன்றை நிறுவிச் சென்றார்.

2013 ஆம் ஆண்டு ஜனவரியில் கனடா திரும்புவதற்கு முதல் அவ்வெளுத்தாளர் இவரைச் சந்தித்த பொழுது காசனுப்பி வைப்பதாக வாக்குறுதி அளிதும் சென்றிருந்தார்.


இப்பொழுது 2014 ஆம் ஆண்டு வந்திருப்பதாக அறிய முடகிறது. இதுவரை ஐந்துக்கும் மேற்பட்ட தடவைகள் வந்து போன அந்நபர் ஒரு தடவையேனும் எழுத்தாளரைச் சென்று சந்தித்ததும் இல்லை.

யாழ்.நகரில் வெவ்வேறு இடங்களில் வீதியோரம் கண்டுவிசாரிக்கையில் புத்தகங்களை விற்பனை போக வில்லை ஆக நூல் தேட்டம் பகுதியினர் ஐந்து புத்தகங்கள் வாங் கியதாகவும் அதற்குக் கூட அவர்கள் இன்னமும் காசு கொடுக்கவில்லை எண்டு சொல்லியுள்ளார்.

பலதடவை வந்து போகையில் நூல்களை எடுத்து வந்து கொடுக்கவுமில்லை. நாற்பது நூல்களை மகளின் ஞாபகார்த்த நிலையத்துக்கு வழங்கிய எழுத்தாளரின் சொந்தப் படைப்பான இருபத்தைந்து புத்தகங்களுக்கும் நாமம் போட்ட நபருக்கு அந்தரங்கள் தோன்றியும் படிக்கவில்லை எண்டால் என்ன நான் சொல்லுறே...

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உரியதீர்வு பெற்று தரப்படும்

## – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு –



(யாழ்ப்பாணம்)

வயாவிளான் குட்டியபுலம் விவசாயிகளினது பிரச்சினைகள் மட்டுமல்லாது குடாநாட்டு விவ சாயிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் இடர்பாடுகளுக்கு உரிய தீர்வு பெற்றுத் தரப் படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள் ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள அமைச்சரின் செயலகத்தில் குட்டியபுலம் அம்பாள் சனசமூக நிலைய பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரை யாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அப்பகுதி விவ சாயிகள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு உற்பத்திகளை அறு வடை செய்த பின்னர் அவற்றை சந்தைப்படுத்துவதில் தாம் பல் வேறுபட்ட இடர்பாடுகளை எதிர் நோக்கி வருவதாக சுட்டிக்காட் டினர். குறிப்பாக தாம் விதை களை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்து அவற்றை நடுகை செய்து உற்பத்திகளை அறுவடை செய்த பின்னர் அவற்றை உரிய விலையில் சந் தைப்படுத்த முடியாத காரணத்தி னால் தாம் வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்த முடியாது கடன்தொல் லைகளால் அவதிப்படுவ தாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், இதுவிடயம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமைச்சரிடம் விவசாயப் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர் .இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் வயாவிளான் குட்டி யபுலம் விவசாயிகள் மட்டுமல் லாது குடாநாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளும் எதிர் நோக்கி வருகின்ற இடர்பாடுக ளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவ டிக்கை எடுக்கப்படுமென தெரி வித்தார்.

இதேவேளை விவசாயிக ளின் நலன்கருதி விரைவில் விவசாயிகளது பிரச்சினைகளை கண்டறிந்து தீர்வு காணும் முகமாக மாநாடொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன் போது சுட்டிக் காட்டினார்.

அத்துடன், எமது ்க்களில் மாகாண சபை கிடைத்திருந்தால் அதனூடாக இங்கு பல்வே றுபட்ட அபிவிருத்தி செயற்றிட் டங்களை முன்னெடுத்திருக்க முடியும். ஆனால் துரதிஷ் டவசமாக அது தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினரின் கைகளில் கிடைக்கப் பெற்றதால் அவர்கள் பல நொண்டிச்சாட்டுக்களை கூறி அபிவிருத்தி செயற்றிட் டங்களை முன்னெடுக்காமல் இருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் எமது மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது அதன் மூலமாக தமது சுயலாப அரசியலை முன்னெடுப் பதையே விரும்புகின்றனர். ஆனால நாம் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு உரியவகை யில் தீர்வு காண்பதையே கருத்தில் கொண்டு அதற்காக குரல் கொடுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தியும் வரு கின்றோம்.

இதனொரு கட்டமாகவே யாழ்.கிளிநொச்சி இரணைமடு குடிநீர்த் திட்டத்தை நாம் ஆத ரித்துவரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுயலாபத்திற்காக இத்திட்டத்தை திட்டமிட்டு தடுத்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை குட்டியபுலம் பகுதியிலுள்ள அம்பாள் சன சமூக நிலையத்தை மீளவும் புனரமைத்து அதனை இயங்க வைப்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விரிவாக கலந்து ரையாடப்பட்டது. இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பி னர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பியின் தெல் லிப்பளை இணைப்பாளர் ஜெய பாலசிங்கம் (அன்பு) ஆகியோர் உடனிருந்தனர்.

# மதுபானசாலைகளை குறைக்கக்கோரி மட்டக்களப்பில் மாபெரும் பேரணி



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுபானசாலைகளின் எண்ணிக் கையினை குறைக்குமாறும் உடலுக்கு தீங்கான மதுபானத் தினை தடைசெய்யுமாறு மக்கள் நெருக்கடி உள்ள இடங்களில் உள்ள மதுபானசாலைகளை அகற்றுமாறும் வலியுறுத்தி நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரில் மாபெரும் எழுச்சிப் பேரணி நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு மகளிர் அமைப்பு களின் சம்மேளனங்கள் இணைந்து இந்த எழுச்சிப் பேரணியை நடாத்தினர்.

மட்டக்களப்பு காந்திபூங்கா வில் மட்டக்களப்பு மகளிர் அமைப்புகளின் சம்மேளனங்க ளின் தலைவி திருமதி செல்வி தலைமையில் ஆரம்பமான பேரணியனாது மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் சென்றது.

இதன்போது மதுபான சாலை களை மூடுமாறும், பாதகமான மதுபானத்தினை தடை செய்யு மாறும் பெண்கள் கோசங்களை எழுப்பியவாறு இந்தப் பேரணி யில் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொண்டோர் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் உருண்டை இறக்குமதியை நிறுத் துங்கள், மதுவுக்கு அடிமை யாகி மரணத்தினை அழைக் காதே, மாவட்டத்தின் பொரு ளாதாரத்தினை உயர்த்துவோம் போன்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்த னர்.


இதன்போது மதுபாவனை யின் தாக்கம் தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களும் விநியோ கிக்கப்பட்டன. பேரணியின் இறுதி யில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# உறக்கத்தில் இருந்த பெண்ணின் மூன்றரை பவுண்சங்கிலி அறுப்பு

யாழ். தாவடி பத்திரகாளி யம்மன் ஆலயத்திற்கு அரு கிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணிய ளவில் பெண்ணொருவரின் கழுத்தில் அணிந்திருந்த 3 ½ பவுண் சங்கிலியினை அறுத்துச் சென்றுள்ளதாக குறித்த பெண் ணினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுன்னா கம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்தவேளை ஜன்னல் வழியாக கைநுழைத்து பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியினை இழுத்து அறுத் துச் சென்றுள்ளதாக முறைப் பாட்டில் பெண் தெரிவித்திருந் ததாகப் பொலிஸார் கூறினார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



அளவையியலும் விஞ்ஞானமுறையும்

## பகுதி 1

01) "இடைமாறு" தொடர்பினை வெளிப்படுத்தி நிற்கும் கூற்று எது?

1) A யின் தந்தை B　: B யின் தந்தை C
2) A யின் எதிரி B　: B யின் எதிரி C
3) A யின் நண்பன் B　: B யின் நண்பன் C
4) A யிலும் B பெரிது　: B யிலும் C பெரிது
5) A யின் சகேதரன் B　: B யின் சகோதரி C

02) விஞ்ஞானம் தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) சோதனையின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவாகும்.
2) பௌதிக அதீத அறிவாகும்.
3) விஞ்ஞானிகள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடாகும்.
4) விஞ்ஞான முறைகளைப் பின்பற்றி உருவாக்கப்படும் அறிவாகும்.
5) 15 ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் இருந்து ஐரோப்பாவில் துரிதமாக வளர்ச்சி அடைந்த அறிவின் பகுதியாகும்.

03) "அழகியல்" என்பது

1) விடய விஞ்ஞானம்　2) விபரிப்பு விஞ்ஞானம்
3) விடயி விஞ்ஞானம்　4) சமூக விஞ்ஞானம்
5) இயற்கை விஞ்ஞானம்

04) வாய்ப்புப் பார்த்தல் அல்லது பொய்ப்பித்தலை விஞ்ஞானத்தின் முறையாகக் கொள்வதற்கு காள் பெப்பரிற்கு இருந்த ஒரு காரணம்

1) வாய்ப்புப் பர்த்தலுக்கு அவதானம் தேவை.
2) அளவையியல் ரீதியில் வலிதான வாதத்தினை முறையியல் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
3) விஞ்ஞான அறிவு பொய்யேயன்றி ஒருபோதும் உண்மையானதல்ல.
4) வாய்ப்புப் பார்த்தலுக்கு பல பரிசேதனைகள் தேவை.
5) தர்க்க ரீதியான உண்மைகள் விஞ்ஞான ரீதியானவை அல்லாதிருப்பதனால்.

05) "அவன் வழுக்கல் தலை உடையவனாகவும் அதேநேரம் வழுக்கல் தலை அற்றவனாகவும் இருக்க முடியாது" எனும் கூற்று உண்மையாவதுடன் தொடர்புபடுவது

1) ஒருமை விதி
2) எதிர்மறை விதி
3) புரணாமை விதி
4) இரட்டை மறுப்பு விதி
5) போதிய நியாய விதி

06) "உலகம் நீரினால் ஆனது" எனக் கூறியவர்

1) தேலிஸ்　2) அனெக்சி மாந்தர்
3) அனக்சிமினஸ்　4) டேக்காட்
5) ஹெரக்கிளைட்டஸ்

07) பௌதிக விஞ்ஞானத்திற்குள்ளும் சமூக விஞ்ஞானத்திற்குள்ளும் ஒருங்கே உள்ளடக்கும் துறை.

1) உளவியல்　2) மானிடவியல்
3) புவியியல்　4) இரசாயனவியல்　5) வெப்பவியல்

08) பின்வருவனவற்றுள் எது நற்சூத்திரம் அல்லாதது

1) $N(NP \rightarrow Q)$
2) $[PV\ QVR]$
3) $(P \rightarrow Q \rightarrow R)$
4) $(P\ \ N\dot{Q})$
5) $\{P \rightarrow [Q \leftrightarrow R\ (-) \rightarrow 5)]\}$

09) "கைவினைவாத மரபும் புலமைவாத மரபும் ஒன்றிணைவதன் அவசியத்தை" ஒரு தீர்க்கதர்சியைப் போல வலியுறுத்தியவர்.

1) டேவிட் ஹியூம்　2) லைபினிஸ்ற்
3) விக்கன்ஸ்ரைன்　4) பிரான்சிஸ் பேக்கன்
5) டேக்காட்

10) $N(NP \rightarrow Q)$ எனும் வாக்கியத்திற்கு தர்க்க ரீதியாக சமனான வாக்கியமாக அமைவது

1) $(P \leftrightarrow Q)$　2) $(NPnNQ)$　3) $(NPVN6)$
4) $N\ (P \rightarrow NQ)$　5) $[(PnQ) \rightarrow NQ]$

11) "கருவியின்" அவசியமாக அமையாதது

1) அளவிலுக்கு　2) பரிசோதனைக்கு
3) அவதானத்திற்கு　4) தனியாள் ஆய்விற்கு
5) அகழ்வாய்விற்கு

12) எல்லா மாணவர்களும் புத்திசாலி எனின் ஒவ்வொரு மாணவரும் புத்திசாலி என்பது

1) முறையான மறுமாற்றம்　2) முறையற்ற நேர்மாற்றம்
3) முறையற்ற எதிர்வைக்கை　4) முறையற்ற மறுமாற்ற நேர்மாற்றம்
5) முறையற்ற மறுமாற்ற எதிர்வைக்கை.

13) விற்தராசிற்கு அடிப்படையாக அமைவது

1) சாள்சின் விதி　2) ஹீக்ஸின் விதி
3) கலிலியோவின் விதி　4) உலோகம் விரிவடைவது
5) புவியீர்ப்புக் கோட்பாடு

14) விஞ்ஞானத்தில் தொடர்புவாதம் எனும் கருத்தை முன்வைத்த விஞ்ஞான முறையியலாளர் பெயர்

1) கான்பொப்பர்　2) தோமஸ்கூன்
3) லக்காதோஸ்　4) கான்ஹெம்பல்
5) பெயிராபென்ட்

15) "இருமதிப்பு அளவையியலில் மாறிகள் நான்கினைக் கொண்ட உண்மை அட்டவணையின் பெறுமதிகளின் எண்ணிக்கை

1) 2　2) 4
3) 8　4) 16　5) 32

16) எழுவாயும் பயனிலையும் முறையே வியாப்த்தி அல்லாமலும் வியாப்த்தியாகவும் இருக்கும் வரிசை ஒழுங்கானது

1) நிறை விதி எடுப்பு　2) நிறை மறை எடுப்பு
3) குறை விதி எடுப்பு　4) குறைமறை எடுப்பு
5) தனி விதி எடுப்பு


17) பொயிலின் விதி -

1) தனி நேர்வாகும்.
2) கொள்கையாகும்.
3) அனுபவ பொதுமையாக்களும் ஆகும்.
4) புள்ளிவிபரவியல் பொதுமையாக்கம் ஆகும்.
5) வெப்பநிலை மாற்றமடையும்போது பொருந்துவதில்லை.

18) பின்வருவனவற்றுள் சமூக விஞ்ஞானங்கள் எவ்வகை சோதனையை அதிகமாக பயன்படுத்திக்கொள்ளும்.

1) அவதானம்　2) பரிசோதனை
3) தீர்ப்புசோதனை　4) கட்டுப்பாட்டு குளுமுறை
5) தனியாள் ஆய்வுமுறை

19)




என்ற வெண்வரைபடத்திலிருந்து பின்வருவனவற்றில் எது வலிதான முடிவு எனக்கூறுக.

1) $A = w$　2) $xy \notin A$　3) $y \notin B$
4) $B =$　5) $A \notin O$

20) நீள்வட்ட வடிவிலான பாதை எந்தக் கோளிலிருந்து முதலில் கண்டு பிடிக்கப்பட்டது.

1) செவ்வாய்　2) புதன்　3) வியாழன்
4) வெள்ளி　5) சந்திரன்

21) "நாகமும், புடையனும் ஆபத்தானது ஆகவே நாகமெல்லாம் புடையனாகும்" எனும் வாதத்தில் இடம்பெறும் போலி

1) நாற்பதப் போலி 2) இருசுற்றுப் போலி
3) பெரும்பதசட்டவிரோதப் போலி
4) சிறுபதசட்டவிரோதப் போலி 5) மத்தியபதப் போலி

22) நியூட்டனின் புவியீர்ப்புக் கோட்பாடு விளக்குவது

1) எரிநட்சத்திரக்கல்லினை 2) பொயிலின் விதியினை
3) சூரியமையக்கோட்பாட்டினை 4) கெப்ளரின் விதிகளை
5) வியாழக்கிரகத்தின் சந்திரன்களை

23) பின்வரும் கூற்றுக்களில் "சரியானது" எது

1) நேர்ப் பெறுகையில் மட்டுமே துணைப்பெறுகை பயன்படுத்தப்படும்.
2) நிபந்தனைப் பெறுகையில்தான் எடுகோள் முன்வைக்கப்படுகிறது.
3) நேர்ப்பெறுகையில் மட்டும்தான் எடுகோள் பயன்படுத்தப்படுகிறது.
4) சரிவு நிபந்தனை வாக்கியமாக இருக்கும்போது மட்டுமே நிபந்தனைப் பெறுகை பயன்படுத்தப்படுகிறது.
5) துணைப் பெறுகை நிறைவு பெற்றவுடன் பிரதான பெறுகை நிறைவு பெற்றுவிடும்.

24) 13 வரையான இரட்டை எண்களின் இடையமாக அமைவது

1) ஓர் ஒற்றை இலக்கம் 2) 6
3) முழுமையின் அரைவாசி 4) ஓர் இரட்டை இலக்கம்
5) 8 ⊙


25) "பெண்களைத் தவிர வேறெவரும் தாய்மை உடையார் அல்லர்" என்ற எடுப்பின் சரியான எடுப்பு வடிவம்

1) பெண்கள் மட்டுமே தாய்மை உடையவர்
2) தாய்மை உடையவர் மட்டுமே பெண்கள் ஆவர்.
3) பெண்கள் எல்லோரும் தாய்மை உடையவர் ஆவர்.
4) தாய்மை உடையவர் எல்லோரும் பெண்கள் ஆவர்.
5) சில பெண்கள் தாய்மை உடையவர்.

26) சேர்தல் விதி, மிறுத்து விதித்தல் விதிகள் இரண்டும் பின்வருவனவற்றில் எவ்வாக்கியத்திற்கு பொருத்தப்பாடுடையது

1) உட்கிடை 2) இணைப்பு
3) உறழ்வு 4) இரட்டை உட்கிடை 5) மறுப்பு

27) பின்வரும் படலத்தின் வெளியீட்டைச் சரியாகக் குறிப்பிடும் சூத்திரம் எது?



1) [(P n Q) V N (PVQ)] 2) [ (PAQ) V (PVQ)]
3) [N(P n Q) V (PVQ)] 4) (PnQ) V N (PVR)
5) [(P → Q) V N(P→ NQ)]

28) (NPVN Q) என்பதன் உண்மை விருட்சம்

1) NP

2)
NP NQ

3) NP
Q

4) P
NQ

5)
P NQ

29) புறவயத் தன்மை என்பதன் மூலம் கருதுவது

1) புறஉலகில் மட்டும் இருக்கின்ற ஒன்றாகும்.
2) அனைவராலும் ஏற்கக்கூடியது.
3) பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படுவது
4) நூறுவீதம் துல்லியமானது
5) சோதிக்கப்படக்கூடியது.

30) பால்வெளியிலிருந்து ஏனைய அசைகின்ற நட்சத்திரக் கூட்டத்தினைக் கண்டுபிடித்தவர்.

1) சேர்ஹெட்மண்ட் ஹெலி 2) எட்வின் அபல்
3) ஜோர்ஜ்கெமவ் 4) சேர் பிரட்ஹொயில்
5) சிறிஸ்டியன் ஹெப்ளர்


31) நியூட்டன் தனது முதலாவது விதியினால் வெளிப்படுத்துவது


1) வலு என்பதன் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
2) உட்கிடையாக்கத்தின் அர்த்தத்தினை எடுத்துக்காட்டுவது
3) வலுவின் விசாலத்தன்மையினை நிர்ணயம் செய்வதற்கான முறை ஒன்றினை எடுத்துக்காட்டுவது.
4) நிலையான அசைவு நேர்கோடொன்றின் நிலையான வேகத்தில் நிகழ்கின்றது என்பதனைக் காட்டியமை.
5) ஈர்பின் திணிவினை நிலையான திணிவிலிருந்து வேறுபடுத்துவதாகும்.

32) பின்வருவனவற்றுள் எது மூடிய உண்மை விருட்சமுறைக்கு அமைவாக உள்ளது?

1) (P n Q) P : NQ 2) (PV Q) Q : NP
3) (NP→Q) NQ: P 4) (NP →Q) (QVR) NP : R
5) (P →Q) (QnR) : (PnR)


33) பின்வரும் தர்ப்படலைகளுள் எது (P → Q) எனும் வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது.


1)



2)



03)



04)



05)



34) சமூக விஞ்ஞானத்தில் நேரடியாக பயன்படுத்த முடியாத நவீன தொழில்நுட்பம் எது?

1) DNA தொழில்நுட்பம் 2) கணனித் தொழில்நுட்பம்
3) தகவல் தொழில்நுட்பம் 4) விண்வெளி ஆய்வுத் தொழில்நுட்பம்
5) கதிரியக்கத் தொழில்நுட்பம்

35) லாவோசியரின் தகனம் பற்றிய பிராணவாயுக் கோட்பாட்டினைப் போன்று வோல்டன் அணுக்கோட்பாடு பின்வருவனவற்றுள் எதில் கவனம் செலுத்தப்பட்ட தால் பெறப்பட்டது.

1) அணுக்கள் 2) வெப்பம்
3) இரசாயனத் தொகுதி 4) நிறை
5) புலொஜிஸ்டன்

36) "மாணவர் மட்டுமே புத்திசாலி" என்பதைக் குறித்து நிற்கும் சரியான குறியீட்டு வாக்கியம்

1) A $\bar{B}$ = ⊙
2) AB = ⊙
3) AB ≠ ⊙
4) A$\bar{B}$ ≠ ⊙
5) AB = ⊙

37) இந்திய அளவையியலில் பரார்த்த அனுமானத்தில் காணக்கூடிய அனுமானப் படிமுறைகள் மொத்தம் எத்தனை?

1) 2 2) 3
3) 5 4) 6 5) 7

38) சமூக விஞ்ஞான ஆய்வில் வினாக்கொத்து முறை

1) ஒரு பரிசோதனையாகும்.
2) நேர்முக விசாரணை முறை சாத்தியமில்லாத நிலையில் மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
3) மாதிரியினைப் பயன்படுத்துவதில்லை.
4) பரந்தளவிலான விடையப் பரப்பிலிருந்து தரவுகளைத் திரட்டிக்கொள்ளப் பயன்படும்.
5) தொலைபேசியினூடாக செயற்படுவதில்லை.

39) எந்த ஒரு காகமும் நான்கு காலுடைய விலங்கு அல்ல என்பதன் சரியான குறியீட்டாக்கம்

1) x fx → Gx 2) x Fx → x Gx
3) Vx (Fx Gx) 4) x (F x n Gx)
5) Fx → NGx

40) உள்பொருள் தனியனாக்கத்தில் புதிய மாறி பயன்படுத்தப்படவேண்டுமாயின் Vx (Fy Hx) என்பதற்கு பின்வருவனவற்றுள் எது பொருத்தமானது

1) (Fa Hx) 2) (Fy HB)
3) (Fx Hy) 4) Fy Hq)
5) (Fa Ha)

# 98 தேசிய பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் இல்லை

## கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் பிரிவு தகவல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள 98 தேசிய பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர் இதுவரை நியமிக்கப்படவில்லை என கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் பிரிவு அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட சகல மாகாணங்களிலும் 365 தேசிய பாடசாலைகள் உள்ளன. இவற்றில் மேல்மாகாணத்தில். 7 தேசிய பாடசாலைகளும் மத்திய மகாணத்தில் 16 தேசிய பாடசாலைகளும், கிழக்கு மாகாணத்தில் 12 தேசிய பாடசாலைகளும் தென் மாகாணத்தில் 18 தேசிய பாடசாலைளும் நிரந்தர அதிபர்கள் இன்றி இயங்கிவருவதாக இப் பிரிவு குறிப்பிடுகிறது.

இதற்கு பொருத்தமான அதிபர்கள் சேவையில் இல்லாதுள்ளனர் எனவும் குறிப்பாக தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளும் இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த அதிபர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். எனினும் அநேகமானோர் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதில் ஆர்வமற்று இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் இலங்கை அதிபர் சேவை தரம்-I இற்கு தரமுயர்த்தப்பட வேண்டிய அதிபர்கள் பலர் சேவையில் இருந்தபோதும் இவர்களுக்கான பதவி உயர்வுகளை கல்வி அமைச்சு பல வருடங்களாக வழங்காதிருப்பதன் காரணமாக அதிகமானோர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அதன் காரணமாக இலங்கை அதிபர் சேவை தரம் I அதிபர்களுக்கான பற்றாக்குறை மிகக்கூடுதலாக காணப்படுவதாகவும் தேசிய பாடசாலைகள் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.-

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சஞ்சிகையின் ஆனி மாத மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இம்மலரில் சைவ விரதங்கள், தமிழும் சைவநெறியும், தவத்திரு சிவயோக சுவாமிகள் பற்றி கட்டுரை, சிறுவர் கதைகள், திருவருட்பயன் சைவ சமய வினா,விடை கண்டோம் கதிர்காமம் தொடர், தமிழகத் திருக்கோயில்கள் உள்ளிட்ட பல ஆன்மீகத் தகவல்களைத் தாங்கி வெள்ளிவந்துள்ளது.

# வவுனியாவில் சர்வமத வழிபாடும் சிரமதானமும்



(வவுனியா)

இனநல்லுறவையும் மதங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும்முகமாக சர்வ மதவழிபாட்டையும் சிரமதான மொன்றையும் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் நேற்று முன்தினம் வெளிக்குளம் பாடசாலையில் முதல் கட்டமாக ஏற்பாடு செய்திருந்தது.

நான்கு மதங்களும் செறிந்து வாழும் வவுனியா மாவட்டத்தில் மதரீதியாகவும் இனரீதியாகவும் ஒற்றுமையாக வாழவும் வவுனியா மாவட்டம் மற்றைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக திகழவேண்டும் என்ற நோக்கத்தோடு இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்ததாக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் செயலாளர் சஜீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

இலங்கை வங்கியின் 75 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு சிரமதான நிகழ்வு யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சுகாதார வைத்திய பரிசோதகர் எம்.ஜீவநாதன், கல்லூரி அதிபர் இளங்கோ, இலங்கை வங்கி முகாமையாளர் க.தர்மராசா ஆகியோருடன் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதி கிளை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

அதிபர் இளங்கோ டெங்கு நோயின் தாக்கம் பற்றியும் அதனை எவ்வாறு தடுப்பது பற்றியும் விளக்கமளித்திருந்தார் வங்கி முகாமையாளரின் நன்றியுடன் சிரமதான நிகழ்வு நிறைவு பெற்றது.

(105)

# பரிசளிப்பு விழா

உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் பரிசில் தினம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய முதல்வர் கு.திலீபன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தி, கௌரவ விருந்தினர்களாக லயன் இராஜகுலசிங்கம் பழைய மாணவர்களான ஆ.தயாகரன் , நா.ரவீந்திரன், சி.ஜெயங்கன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்

(137)

# கத்தோலிக்க மறைக்கல்வி இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2013 எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளன.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பரீட்சைகள் இடம்பெறும் மறைப்பாடசாலையில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று இறுதி நற்சான்றுப் பத்திர வகுப்பில் ஒருவருடம் கல்வி பயின்றவர்களும் க.பொ.த (சா.த) பரீட்சையில் கத்தோலிக்க மறையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி முன்னர் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும. விண்ணப்பங்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சை திணைக்களம் ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை பெலவத்தை பந்தரமுல்லை என்ற முகரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

சித்திபெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# 130 ஆவது அகவை காணும் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்



பல்வேறு சிறப்புக்கள் வாய்ந்தது சுதுமலைக் கிராமம். தெய்வீகம் மிக்க இவ்வூரில் வரலாற்றுப் புகழ்பெற்ற சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. இங்குள்ள மக்கள் சைவ ஆச்சாரம் மிக்கவர்களாகவும் கல்வியில் சிறந்தவர்களாகவும் விளங்கி வருகின்றனர்.

ஆறுமுகநாவலர் காலத்தில் வாழ்ந்தவர்களில் ஸ்ரீமான் ஆறுமுகப்பிள்ளை சிந்நயபிள்ளையும் முக்கியமானவராவார். இவர் வைத்தியத்துறையிலும் சோதிடத்திலும் மிகுந்த வல்லுநராகக் காணப்பட்டார்.

இவர், சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். சுதுமலை வாழ் சிறார்கள் கல்வி கற்று ஒழுக்கசீலர்களாக வாழ வேண்டும் என்ற நன நோக்குடனேயே பாடசாலையை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இப் பாடசாலை சின்னையா பள்ளிக்கூடம் என்று ஊர் மக்களால் அழைக்கப்பட்டது.

இப் பாடசாலையானது 1885ஆம் ஆண்டு ஆனி மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பாடசாலையின் முழுச் செலவினங்களும் ஸ்தாபகராலேயே மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 1905ஆம் ஆண்டு உதவி நன்கொடைபெறும் பாடசாலையாகப் பதியப்பட்டது.

வருடாவருடம் கொடுக்கப்படும் நன்கொடை போதாதிருந்ததனால் ஸ்தாபகராலேயே செலவுகளைப் பொறுப்பேற்கவேண்டிய நிலை இருந்தது.

பின்னர் கனிஷ்ட பாடசாலையாக ஆக்கப்பட்டு பாலபண்டித வகுப்புகளும் நடைபெற்றன. அத்துடன் என்.பி.ரி.ஏ எனப்படும் ஆசிரியக் கழகம் நடாத்திய பரீட்சையிலும் மாணவர்கள் தோற்றினர். படிப்படியாக சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டதை அறி யக் கூடியதாகவுள்ளது. 1930ஆம் ஆண்டளவில எஸ்.எஸ்.சி. வகுப்புக்களும் பால பண்டித வகுப்புக்களும் நடைபெற்றன.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த சிந்மய பாரதி வித்தியாசாலை எனப்பட்ட எமது பாடசாலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் வகுப்புக்கள் குறைக்கப்பட்டு 1960ஆம் ஆண்டளவில் 8ஆம் வகுப்பு வரையிலுமே கற்றல் செயற்பாடுகள் நடைபெற்றன.

மீண்டும் தராதரம் குறைக்கப்பட்டு ஆரம்பப் பாடசாலையாக இயங்கியது.

1981ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து மீளவும் படிப்படியாக வகுப்புக்கள் உயர்த்தப்பட்டன.

இக்காலகட்டத்தில் திருமதி ஜெயதேவி கிருஸ்ணசாமி அதிபராக இருந்தார். இவரது காலம் பாடசாலையின் பொற்காலம் என ஊரவர்களால் போற்றப்படுகிறது.

1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய ஆயிரத்துக்கு அண்மித்த மாணவர்கள் இப் பாடசாலையில் கல்வி கற்றனர். நாட்டுச் சூழ்நிலை, மக்கள் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் தற்போது மாணவர்கள் தொகை சற்றுக் குறைவடைந்துள்ளது. எனினும் பல் துறையிலும் புகழ்பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக சிந்மய பாரதி மிளர்கின்றது.

அதிபர்கள் வரிசையில் திருமதி ஜெயதேவி கிருஸ்ணசாமிக்கு அடுத்து திருமதி சா.ஜெயவீரசிங்கம், பெ.குபேரநாதன், த.தர்ம சோதி, த.சண்முகசுந்தரமூர்த்தி ஆகியோா பாடசாலையைப் பொறுப்பேற்று தத்தமக்குரிய பாணியில் பாடசாலையை வளப்படுத்தினர்.

தற்போது ஆ.பேரின்பநாயகம் அதிபராகப் பொறுப்பேற்று பாடசாலைக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் வகையில் செயற்பட்டுவருகின்றார்.

இந்நிலையில், எமது பாடசாலை 129 ஆவது அகவை நிறைவடைந்து 130ஆவது அகவை தொடங்கியுள்ள இந்தக் காலகட்டத்தில் எமது பாடசாலையின் வரலாற்றினை ஆவணப்படுத்தும் நோக்கில் சிந்மயம என்னும் பெயரில் சஞ்சிகை ஒன்றை வெளியிடுகிறோம்.

சிந்மயம என்றால் அறிவுமயம் ஞானமயம எனப் பல பொருட்கள் உள்ளன. இப்பெயரினை தாங்கி வெளிவரும் இச் சஞ்சிகையானது எமது பாடசாலையின் வரலாற்றினை உலகறியச் செய்யும் ஓர் ஆவணமாகும்.

இச்சஞ்சிகை வெளியீடானது மிகச் சிறப்புற அமைய எல்லாம் வல்ல ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

* * * *


-பாடசாலைச் சமூகம்

**சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தின் 130 ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.**



பாடசாலை ஸ்தாபகர் ஆ.சிந்நயபிள்ளை

# ஈராக்கில் புதிய அரசை ஏற்படுத்த அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்து




ஈராக்கில் புதிய அரசை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா, துணை அதிபர் ஜோ பிடன் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி ஆகியோர் சவூதி மற்றும் ஈராக்கில் தலைவர்களை வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, அதிபர் ஒபாமா சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாவுடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது, ஈராக்கில் தற்போதைய நிலைமை மற்றும் அண்டை நாடுகளிலும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் நீடித்து வருவது குறித்து இருவரும் விவாதித்தனர். அனைத்து சமூகத்தினரையும் ஒருங்கிணைத்து விரைவில் ஒரு புதிய அரசை நிறுவுவதற்கு ஈராக் தலைவர்கள் முயற்சிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

ஈராக்கிற்கு 50 கோடி டாலர் உதவி வழங்கியதற்காக மன்னர் அப்துல்லாவுக்கு ஒபாமா நன்றி கூறினார். இந்நிலையில், ஈராக் முன்னாள் எம்பியும் சன்னி பிரிவு முக்கிய தலைவருமான ஒசாமா அல்-நுஜா:பியுடன் துணை அதிபர் ஜோ பிடன் தொலைபேசியில் பேசினார். அப்போது, ஈராக்கில் புதிய அரசு அமைக்கப்பட வேண்டியது குறித்து அவரிடம் ஜோ பிடன் வலியுறுத்தினார் என்று அந்தச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பூக்கள் வாடாமல் இருக்க புதிய வழிமுறை கண்டுபிடிப்பு




(டோக்கியோ)

பூக்களில் மரபணுக்களை மாற்றுவதன் மூலம் செடியில் இருந்து பறித்த பிறகும் 24 மணிநேரத்திற்கும் மேலாக வாடாமல் இருப்பதற்கான வழிமுறையை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதுகுறித்து கெனிச்சி ஷபுயா கூறுகையில், பொதுவாக செடிகளில் பூக்கும் மலர்கள் 13 மணி நேரம் மட்டுமே உயிர் வாழ்கிறது. பின்னர் வாடி வதங்கிவிடுகிறது. நாங்கள் எபிமிரல் 1 என்ற மரபணுவை அந்தப் பூக்களின் செடிகளுக்குள் செலுத்தினோம். அந்த பூச்செடிகள் புதிய மரபணுவை உறிஞ்சிக் கொண்டு, அதன் பிறகு உருவான மலர்களில் ஒருவித மாற்றத்தை ஏற்படுத்தியது. மரபணு மாற்றத்துக்குப் பிறகு அம்மலர்களின் ஆயுள் மேலும் பாதியாக அதிகரித்தது. இதன்மூலம் அந்த பூக்களின் இதழ்கள் 24 மணி நேரமும் பொலிவுடன் காணப்பட்டது என்று தாவரவியல் விஞ்ஞானி கெனிச்சி ஷபுயா கூறினார்.

## உலகச் செய்திகள்

## அமர்நாத்தில் பனிலிங்க தரிசனம் படையெடுக்கும் யாத்திரீகர்கள்



(ஜம்மு)

ஜம்மு காஷ்மீர் மாநிலம் அமர்நாத் குகைக் கோயிலில் ஆண்டுதோறும் தோன்றும் பனிலிங்கத்தை தரிசிக்க ஜம்மு வழியாக யாத்திரீகர்கள் பயணம் செய்வார்கள். அதன்படி இந்த ஆண்டும் அமர்நாத் யாத்திரை தொடங்கியுள்ளது.

இந்த ஆண்டு தரிசனத்தையொட்டி யாத்திரீகர்களின் முதல் குழுவினர் கடந்த மாதம் 28ஆம் திகதி பயணத்தை தொடங்கினர். இந்த சீசனுக்கான யாத்திரை தொடங்கி இதுவரை 14 ஆயிரத்து 592 யாத்திரீகர்கள் அமர்நாத் குகைக் கோயிலுக்கு சென்றுள்ளனர்.

இந்நிலையில், 1,533 ஆண்கள், 443 பெண்கள், 39 குழந்தைகள் மற்றும் 145 சாதுக்கள் அடங்கிய மொத்தம் 2160 பேர் கொண்ட பத்தாவது யாத்திரீகர்கள் குழு நேற்று முன்தினம் காலை ஜம்முவில் இருந்து குகைக் கோயிலை நோக்கி புறப்பட்டுள்ளனர்.


## ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 12 இராணுவ வீரர்கள் பலி

ஈராக்கில் தற்கொலைப்படை நேற்று முன்தினம் நடத்திய கார் குண்டு தாக்குதலில் 12 ஈராக் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். மேலும், 30 பேர் படுகாயம் அடைந்ததாக தகவல் வெளியாகின.

வடக்கு பக்தாத்தில் இருந்து 170 கிலோ மீற்றர் தொலைவில் இந்த தாக்குதல் நடந்துள்ளது. பாதுகாப்பு பணியில் ஈடுப்பட்டிருந்த இராணுவ வீரர்களை நோக்கி, தற்கொலைப்படையினர் வந்த கார் வெடிக்க வைக்கப்பட்டது. இதில் இராணுவ வீரர்கள் 12 பேர் உயிரிழந்ததாகவும், 30 பேர் படுகாயம் அடைந்ததாக ஜிங்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் ஆதிக்கம் உள்ள அரசுக்கு எதிராக சன்னி பிரிவை சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ் கிளர்ச்சியாளர்கள் உள்நாட்டு போரை நடத்தி வருகின்றனர். இந்த போர் நாளுக்கு நாள் தீவரமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## போலந்தில் விமான விபத்து ஸ்தலத்தில் 11 பேர் பலி



(வார்சா)

போலந்து நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள செஸ்டோசோவா பரசூட் கிளப்பிற்கு அருகில் நடைபெற்ற ஒரு விமான விபத்தில் 11 பேர் பலியானதாகவும், ஒருவர் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிகப்பட்டுள்ளதாகவும் அங்கு மீட்புப் பணியில் ஈடுபட்டுவந்த அவசர சேவைகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பைபர் நவஜோ என்ற அந்த விமானம் 11 பரசூட் வீரர்கள் மற்றும் ஒரு விமானியுடன் தெற்கிலிருந்து பறந்து வந்துகொண்டிருந்ததாகவும், அதன் என்ஜினிலிருந்து வினோதமான சத்தங்கள் வந்துகொண்டிருந்ததாகவும் விபத்தை நேரில் பார்த்த பார்பரா மின்சிகிவிக்ஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

வீடுகளுக்கு மிக மேலாக பறந்துவந்த அந்த விமானம் ஒரு பக்கமாக சாய்ந்து ,பின்னர் தீப்பற்றி கீழே விழுந்தது என்று அவர குறிப்பிட்டிருந்தார்.

## எதிர்க்கட்சி தலைவர் பதவி சட்டத்தை திருத்த வேண்டும்

### காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங் தெரிவிப்பு



(புதுடில்லி)

இந்திய மக்களவையில் எதிர்க்கட்சி பதவிக்கான சட்டத்தை திருத்த வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் பிரதான எதிர்க்கட்சி பதவியை பெறுவதற்கு, அவையின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 10 சதவீதத்தை ஒரு கட்சி பெற்றிருக்க வேண்டும், இதன்படி, குறைந்தது 55 எம்.பி.க்களை பெற்றிருக்க வேண்டும்.

காங்கிரசுக்கு இந்த பதவியை வழங்கும்படி சுமித்ரா மகாஜனை காங்கிரஸ் மக்களவை கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடந்த சனிக்கிழமை சந்தித்து வலியுறுத்தினார். ஆனால், தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையிலேயே சுமித்ரா முடிவு எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங் டில்லியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், மக்களவை எதிர்க்கட்சி பதவியைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் 55 எம்.பி.க்கள் இருக்க வேண்டும் என்ற சட்டத்தைத்திருத்தம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இது பற்றி நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் வெங்கய்யா நாயுடு கூறும் போது, இது எனது அதிகாரத்துக்கு உட்பட்டது அல்ல. சபாநாயகரின் அதிகாரத் துக்கு உட்பட்டது. அது பற்றி அவர் தான் முடிவு எடுக்க வேண்டும் என்றார்



லாவோஸ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜூலி பிஷப் லாவோ தலைநகரில் அந்நாட்டின் பிரதமர் தாங்சிங் தமாவோங்கை சந்தித்தார்.


## செவ்வாய்க்கு புதிய ரொக்கெட் நாசாவின் திட்டத்திற்கு பாரிய நிதி

செவ்வாய் கிரகத்துக்கு அதிசக்தி வாய்ந்த ரொக்கெட்டை அனுப்ப நாசா 17 ஆயிரம் கோடிரூபா செலவிட திட்டமிட்டுள்ளது. செவ்வாய்க்கிரகத்தில் அமெரிக்காவின் நாசா மையம் ஆய்வு செய்து வருகிறது. அதற்காக கியூரியோ சிட்டி என்ற விணகலத்தை வெற்றிகரமாக அங்கு அனுப்பியுள்ளது. அது அந்த கிரகத்தின் அமைப்பு, விண்வெளி, தட்ப வெப்ப நிலை போன்றவைகளை போட்டோ மற்றும் மாதிரிகள் எடுத்து ஆராய்ச்சி செய்து வருகிறது. இதற்கு அடுத்தபடியாக செவ்வாய் கிரகத்துக்கு விஞ்ஞானிகளை நேரடியாக அனுப்பி ஆய்வு மேற்கொள்ள நாசா திட்டமிட்டுள்ளது.

அதற்காக அதிசக்தி வாய்ந்த இராட்சத ரொக்கெட் தயாரிக்கப்படுகிறது. இத்திட்டத்துக்கு 17 ஆயிரம் கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இராட்சத ரொக்கெட்டை போயிங் நிறுவனம் உருவாக்குகிறது. அதற்காக நாசாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்படும் ரொக்கெட் 143 தொன எடையுடன் வடிவமைக்கப்படுகிறது. அதற்கான இறுதி மாதிரி வடிவத்தை நிபுணர்கள் வடிவமைத்துள்ளனர். 2017ஆம் ஆண்டில் இந்த ரொக்கெட் சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள சரியான அரசியல் தெளிவே அவசியம்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



தீவிரவாத நோக்கிலான அரசியல்வாதிகளிடமிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும் தமது வாழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்கிக் கொள்வதற்கும் அரசியல் சார்ந்த தெளிவே மக்களுக்குச் சரியான அரசியல் வழிமுறைகளை இனம்காட்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வண்ணாங்கேணி வடக்கு கிராமத்தின் தேவைகள், பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மீள்குடியேற்றத்தின் பின்பு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் எமது செயற்பாடுகளை ஆரம்பித்த காலத்தில் இங்கு எதுவுமே இருக்கவில்லை. மக்கள் பற்றைகள் நிறைந்த பகுதிகளிலேயே மீள்குடியேறினர். ஆனால், இன்று அபிவிருத்தி செயற்பாடுகளின் மூலம் பிரதேசம் புதுப்பொலிவு பெற்றிருக்கின்றது. நிம்மதியான வாழ்வும் பாதுகாப்பான இருப்பிடமும் மற்றும் சுமூகமாக வாழக்கூடிய சூழலும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களையும் குடும்பங்களுக்கான வருமான மார்க்கங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளில் நாம் அதி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றோம். அதற்காக தொழில் மையங்களை உருவாக்குவதற்கும் முதலீட்டாளர்கள் இப்பகுதிகளிலும் தொழில்சார் முதலீடுகளை மேற்கொள்வதற்குமான அடிப்படை உட்கட்டுமானங்களை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

பதற்றமான சூழல் உருவாக்கப்படுமாயின் முதலீட்டாளர்கள் இங்கு வந்து முதலிடுவதற்கான வாய்ப்புக்கள் அற்றுப் போகும். அதுமட்டுமன்றி தற்போது இயங்கிவரும் தொழில் மையங்களும் இயங்காத நிலைமைகளே உருவாகும். அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுமாயின் எமது மக்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து பொருளாதார வருமானங்கள் அற்றுப்போய் வறுமையின் பிடிக்குள் சிக்கித் தவிக்கின்ற நிலைமையே உருவாகும்.

ஏற்பட்டுள்ள இந்த இயல்பு சூழலை சீர்குலைப்பதற்கு சில அரசியல்வாதிகள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றனர். அவர்கள் ஏன் இவ்விடயத்தில் முனைப்புக்காட்டுகின்றார்கள் என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது மக்கள் தொடர்ந்தும் அவலங்களுக்குள் வாழ்கின்ற போதே அவர்களின் அரசியல் வழிமுறைக்கு வாக்குக் கிடைக்கும். எனவே, மக்கள் மத்தியில் அவலங்களை ஏற்படுத்துவதற்கு பல தந்திரோபாயங்களைக் கையாளுகின்றார்கள்.

அடுத்து இவ்வாறான அரசியல்வாதிகள் வெளிநாடுகளில் வாழ்கின்றவர்களின் நலன்களையும் பாதுகாக்க வேண்டியவர்களாக உள்ளனர். ஏனெனில், இன்று பல செல்வந்த நாடுகள் இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சமளிக்கவும், நிரந்தர வதிவிட விசாக்களை வழங்குவதற்கு மறுக்கின்றன. அதற்கு மூலகாரணம் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இயல்பு சூழலே. இதனால் அங்கு செல்பவர்களை அந்நாடுகள் மீளவும் இலங்கைக்கு திருப்பி அனுப்புகின்றன. எனவே, அவ்வாறானவர்கள் இங்கு ஏற்பட்டிருக்கும் இயல்பு நிலைமையில் பாதிப்புக்களை ஏற்படுத்தி இங்கு ஒரு பதற்ற நிலைமையை தோற்றுவிக்கவும், அதனூடாக தொடர்ந்தும் தாம் வெளிநாடுகளில் வாழவும் முனைகின்றார்கள். அந்த செயற்பாடுகளுக்கு இங்குள்ள சில அரசியல்வாதிகள் முகவர்களாக செயற்படுகின்றார்கள்.

ஆகவே, இவ்வாறான தீவிரவாத நோக்கிலான அரசியல் சிந்தனையாளர்களிடமிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும், தமது வாழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்கிக்கொள்வதற்கும் அரசியல் சார்ந்த தெளிவை மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த தெளிவே மக்களுக்கு சரியான அரசியல் வழிமுறைகளை இனம்காட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வண்ணாங்கேணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் சிவனேந்திரனின் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அப்பகுதி. மக்களின் தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதில் மாணவர்களுக்கான மாலை நேர கற்றல் செயற்பாட்டுக்கான ஏற்பாடுகள் முக்கியமானதென இனம்காணப்பட்டதைத் தொடர்ந்து அதற்கான நிதியினை வழங்குவதற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன் மற்றும் இராசதுரை ஆகியோருடன் மக்களும் கலந்துகொண்டனர்.

# காதல் ஜோடியின் சில்மிஷம் முகம் சுழித்த பயணிகள்

விடுமுறை நாட்களில் சிற்றூர்திகளில் செல்லும் காதல் ஜோடிகளின் சில்மிஷங் களால் பயணிகள் பெரும் அசௌகரியம் அடைவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் கலாசாரத்திற்கு முரணான வகையில் காதல் ஜோடி ஒன்று நேற்று மாலை கொடிகாமத்திலிருந்து யாழ். நோக்கிச் சென்ற சிற்றூர்தியில் கட்டித்தழுவி காதல் சில்மிஷத்தில் ஊறியவாறு பயணித்தது.

சிற்றூர்தியில் சிறார்கள், பெண்கள், வயோதிபர்கள் எனப் பெருமளவான பொதுமக்கள் பயணித்துக் கொண்டிருந்தும் இந்த ஜோடி தமது காதல் லீலைகளை கைவிடவே இல்லை.

எமது கலாசாரம் சீரழிவுப் பாதையில் போய்க்கொண்டு இருப்பதை இக்காதல் ஜோடியின் செயற்பாடு காட்டுவதாகவும், மிருகங்களைப் போல் செயற்படும் இவ்வாறான ஜோடிகளால் எதிர்காலச் சந்ததியினர் என்னவாகப் போகின்றனரோ என இச்சிற்றூர்தியில் பயணித்த பலரும் தமது ஆதங்கத்தைத் தெரிவித்தனர். (இ)

# இருதரப்பு பிராந்திய விடயங்கள் பீரிஸுடன் பேசவுள்ளார் சுஷ்மா

(கொழும்பு)

இந்தியாவிற்குச் செல்லவுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் இரு தரப்பு மற்றும் பிராந்திய விடயங்கள் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கலந்துரையாடவுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எதிர்வரும் 10ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் அவர் ஹைதராபாத்தில், ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவையும், தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

மறுநாளான, 11 ஆம் திகதி புதுடில்லியில், அவர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

வெளிவிவகார அமைச்சரின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தச் சந்திப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## காணாமற்போனோரின்...

றைய அமர்வில் சாட்சியமளிப்பதற்காக வருகைதந்திருந்த பெண் ஒருவரே இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் கணவரை தாம் இராணுவத்தினரிடம் ஒப்படைத்ததாகவும் அவர் மீண்டும் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுடன் புதுக்குடியிருப்பில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. இன்றையதினம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் சாட்சியப்பதிவுகள் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஐ.நா. விசாரணையில்...

விசாரணைக்குப் பரிந்துரை செய்த, கடந்த மார்ச் மாத ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை தோற்கடிக்கவும், அதனைத் தடுக்கவும். பாகிஸ்தான் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டது.

இத்தகைய நிலையில், பாகிஸ்தானைச் சேர்ந்த ஐ.நா. விசாரணை நிபுணர் அஸ்மா ஜஹாங்கீர் மீது, இந்த விசாரணை விவகாரத்தில் அந்த நாட்டு அரசாங்கம் செல்வாக்குச் செலுத்துமா என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள, அஸ்மா ஜஹாங்கீர், ஒரு நிபுணர் என்ற வகையில் நான் சுதந்திரமானவள். எப்போதும் அவ்வாறு தான் இருக்கிறேன்.

எனது நாட்டு அரசாங்கம் இந்த விவகாரம் குறித்து இதுவரை என்னிடம் பேச வில்லை.

எந்த அரசாங்கமோ, நிறுவனமோ என் மீது தலையீடு செய்ய முடியாது என்று தெரிவித்துள்ளார்.

## இராணுவத்திற்கு...

மாறு காணி அமைச்சின் மேலதிக செயலாளரினால் செட்டிகுளம் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இக் காணிகள் தனியாருக்கு சொந்தமான காணிகளாகும். அதில் அருவி ஆற்றின் கீழ் விவசாயம் செய்கை பண்ணப் பட்ட 600 ஏக்கர் வயல் நிலங்களும் அடங்குகின்றன. தற்போது இக் காணிகளுக்குள் நுழைய முடியாதுள்ளது. இது இராணுவத்தினரின் காணி எனவும் பலகை நாட்டப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர் என பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நீண்ட விவாதங்கள் இடம் பெற்றதன் பின்னர் இக் காணியை இராணுவத் தேவைக்கு வழங்க முடியாது எனவும் அதனை மக்கள் பாவனைக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

## சாட்சியமளிப்...

னிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரன்கீன் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளில் பங்கேற்காவிட்டால் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுவிடும் என அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரசாங்கம் விசாரணைகளில் பங்கேற்று தமது பக்க நியாயங்களை முன் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளில் பங்கேற்கும் அனைத்து தரப்பினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார். சாட்சியாளர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அது பாதக விளைவுகளை உண்டு பண்ணும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## உள்ளக...

கிய நாடுகள் அமைப்பு தெளிவாக புரிந்துகொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே சர்வதேச நாடுகளுடன் இலங்கை ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## கவர்ச்சியான....

ஆனால் இவர்களைப் பின்னாலிருந்து முன்னோக்கிச் செல்லவிடாது இழுப்பதற்கு அக்கட்சியில் பலர் இருப்பது கவலை தருகிறது. ஜனாதிபதி தெரிவித்தது போல அரசாங்கம் உண்மையில் பேச்சுவார்த்தைக்கு அன்று போல இன்றும் தயாராகவே உள்ளது.

எனவே கூட்டமைப்பின் தலைவரும், உறுப்பினர்களும் அறிக்கை விட்டு மக்களைத் திருப்திப்படுத்துவதை விடுத்து அரசாங்கத்துடன் உண்மையான இதயசுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும். இல்லாவிடில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்தாவது தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையின்...

அவர், இலங்கையில் என்ன நடக்கிறது, இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தென்னாபிரிக்காவிடம் இருந்து எத்தகைய உதவிகள் தேவைப்படுகிறது என்று அறிந்து கொள்வதில் ஆர்வமாக உள்ளார்.

தென்னாபிரிக்கப் பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பது பற்றிய செயல் முறைகள் அனைத்தையும் தீர்மானிக்க வேண்டியது இலங்கை அரசாங்கமே.

அதனை உருவாக்க இலங்கை விரும்பினாலோ அல்லது முடிவு செய்தாலோ, அதற்கான நடவடிக்கைகளை அவர்களே மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், தென்னாபிரிக்க பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை முயற்சிப்பதா இல்லையா என்பது குறித்து இலங்கை எதனையும் கூறவில்லை.

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக் குவது நல்லது என்று முடிவு செய்தால், அடுத்த நகர்வு என்னவென்று ரமபோசா முடிவு செய்வார்.

தேசியப் பிரச்சினை தொடர்பாக பல இலங்கை குழுக்கள், தென்னாபிரிக்கா வந்து பேச்சுக்களை நடத்தின. அவர்களுடன் எமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டோம்.

அதற்கு அப்பால் ஒன்றுமில்லை. நாம் யாருக்கும் எதற்கும் அழுத்தம் கொடுக்கமாட்டோம்.

நாம் யாழ்ப்பாணத்துக்கோ, அளுத்கமவுக்கோ பயணம் செய்யப் போவதில்லை.

இலங்கையில் எமது நிகழ்ச்சி நிரல் என்னவென்று நான் அறியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# குருக்கள்மடத்தில் காணாமற்போன முஸ்லிம்கள் குறித்து வாக்குமூலங்கள்



1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் பகுதியில் கடத்தப்பட்டுக் காணாமற்போனதாகக் கூறப்படும் முஸ்லிம்களின் உறவினர்களிடமிருந்து பொலிஸாரால் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்படுகின்றன.

நேற்று தொடங்கிய இந்தப் பதிவு நாளை செவ்வாய்க்கிழமை வரை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இடம்பெறுமென பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் தகவல்களின்படி நேற்று முதல் நாளில் 28 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1990 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் போர் மூண்ட காலத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 150 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் காணாமற்போயுள்ளதாக முஸ்லிம்கள் கூறுகின்றார்கள்.

1990 ஆம் ஆண்டு யூலை 12 ஆம் திகதி மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி வழியாக வாகனங்களில் பயணம் செய்தவேளையில், விடுதலைப் புலிகளினால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு குருக்கள் மடம் கடலோரமாக இவர்கள் புதைக்கப்பட்டுள்ளதை அந்தப் பகுதி மக்கள் மூலம் தங்களால் அறிய முடிந்ததாகவும் முஸ்லிம்கள் தெரிவிக்கின்றார்கள்.

சம்பவத்தில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் தமது உறவினர்கள் இருவர் தொடர்பாக காத்தான்குடி பிர்தேசவாசியொருவர் பொலிஸில் செய்திருந்த முறைப்பாடொன்றின் பேரில் பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்வைத்த அறிக்கையொன்றின் பேரில் முஸ்லிம்களின் புதைகுழிகள் என அடையாளம் காணப்பட்ட இடங்களில் அடுத்த மாதம் 18 ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான உத்தரவு களுவாஞ்சிக்குடி மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே குறித்த மனிதப் புதைகுழி தொடர்பாக இதுவரை முறைப்பாடுகளை பதிவு செய்யாதவர்களிடமிருந்து முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கான இந்த விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 20 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 20 இந்திய மீனவர்கள் தலைமன்னார் கடற்பிராந்தியத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் நான்கு படகுகளுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசலவர்ணகுலசூரிய தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கைக்கு கட்டணம் செலுத்தி கச்சதீவில் மீன்பிடிக்கத் திட்டம்

## இந்திய அரசு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக, எதிர்காலத்தில் கச்சதீவு பகுதியில் கட்டணம் செலுத்தி தமிழக மீனவர்கள் தங்கு தடையின்றி மீன் பிடிக்க ஏற்பாடு செய்து கொடுக்கலாமா என்று இந்திய மத்திய அரசு ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கச்சதீவு அருகில் மீன் வளம் அதிகமாகக் காணப்படுவதால் தமிழக மீனவர்கள் அப்பகுதியில் மீன் பிடிக்கின்றனர். ஆனால், அங்கு இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கக்கூடாது என இலங்கை அரசு வலியுறுத்திவருகின்றது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அடுத்த வாரம் இந்தியாவில் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுபலசேனாவை தடைசெய்யக்கூடாது

## அமைச்சர் விமல் கோரிக்கை

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பை தடை செய்யக் கூடாது என அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.


தேசிய சுதந்திர முன்னணி நாடு முழுவதும் நடத்தி வரும் கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுபலசேனா தடை செய்யப்படுமானால், தவ்ஹித் ஜமாத் போன்ற அமைப்புகளும் தடை செய்யப்பட வேண்டும்.

இந்த அமைப்புகளை தடை செய்யக்கூடாது. அப்படி தடை செய்தால், இந்த அமைப்புகள் பொய்யான வீரத்தை பெற்றுக் கொள்ளும். அதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் அமைச்சர் வீரவன்ச கூறியுள்ளார்.

# ஜோர்தானிலுள்ள மனைவியை இலங்கைக்கு அழைக்குமாறு கணவன் நூதன போராட்டம்



ஜோர்தானில் பணிப்பெண்ணாக வேலை செய்யும் தனது மனைவியை இலங்கைக்கு அழைத்துவருமாறு வலியுறுத்தி, கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில், அப்பெண்ணின் கணவர், தனது இரு குழந்தைகளுடன் 80 அடி உயரமான தொலைத்தொடர்பு கோபுரமொன்றின் மேல் ஏறி போராட்டம் நடத்தி வருகின்றார்.

மனைவியின் புடவையில் தனது இரண்டரை வயது குழந்தையை வயிற்றில் கட்டிக்கொண்டும் 6 வயது குழந்தையை தனது தோளில் சுமந்துகொண்டும் மேற்படி நபர் 80 அடி உயரமான கோபுரத்தில் ஏறியுள்ளார்.

சுமார் இரண்டரை மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸார் அவர்களை மிகவும் தந்திரமான முறையில் கீழே இறக்கியுள்ளனர்.

# அகதிகள் தொடர்பான கொள்கை சர்வதேச சட்டங்களை மீறவில்லை

## அவுஸ்ரேலியா தெரிவிப்பு



அகதிகள் தொடர்பிலான சர்வதேச சட்டங்களை அவுஸ்ரேலியா மீறவில்லையென அந்த நாட்டின் வெளிவிவகார அமைச் சர் ஜூலி பிஷொப் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்ரேலியாவின் பாதுகாப்பைத் தேடிச் சென்ற 153 இலங்கை தமிழ் அகதிகள் கடலில் இடைமறிக்கப்பட்ட விடயம் குறித்து யு.என்.எச்.சி.ஆர். அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டிருந்தது. அத்துடன், சர்வதேச நியமங்கள் மற்றும் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அவுஸ்ரேலியாவுக்கு எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில், ஆஸியின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப் அந்நாட்டு ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிடுகையில்,

எல்லைப் பாதுகாப்பினை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். கடலில் பெண்களும், ஆண்களும் சிறுவர்களும் கொல்லப்படுவதனை அரசாங்கத்தினால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதி மொழியின் அடிப்படையிலேயே தேர்தலில் அரசாங்கம் போட்டியிட்டது.

எவ்வாறெனினும், இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களின் இரண்டு படகுகளுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி குறிப்பிட முடியாது. இவ்வாறான தகவல்களை வெளியிடுவது சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு சாதகமாக அமையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.


## பணியாளர்கள் தேவை

**கீழ்வரும் பணியாளர் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.**

- இயந்திர இயக்குநர்கள்
- இயந்திர உதவியாளர்கள்
- யந்திர வேலை பழக விரும்புபவர்கள்

KORD, SORD ஆகிய அச்சு இயந்திரங்கள் இயக்கக்கூடிய முன் அனுபவம் வாய்ந்த ஆண் பணியாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

### தகைமைகள்

- தேக ஆரோக்கியம் உடையவராகவும்
- இரவு பகல் பணியாற்றக்கூடியவர்களாகவும்
- பத்திரிகைத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

மேற்படி தகைமைகள் உடையவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன், அலுவலக நேரத்தில் எமது காரியாலயத்திற்குச் சமுகம் தரவும்.

சம்பள்ம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

**தினமுரசு நாளிதழ்**
**இல.373, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**


# விம்பிள்டன் கிண்ணம் கிவிட்டோவா வசம்



(லண்டன்)

கனடாவின் பௌச்சர்ட்டை வீழ்த்தி விம்பிள்டன் ரென்னிஸ் கிண்ணத்தைக் கைப்பற்றினார் செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவா.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்றதும் மிகப் பழமை வாய்ந்ததுமான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடந்தது.

இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் இளம் வீராங்கனையான கனடாவின் பௌச்சர்ட், செக் குடியரசின் பெட்ரா கிவிட்டோவாவை எதிர்கொண்டார். 55 நிமிடங்கள் மாத்திரமே நீடித்த இந்த ஆட்டத்தில் கிவிட்டோவா 6-3, 6-0 என்ற செற்களில் பௌச்சர்ட்டை இலகுவாக வீழ்த்தினார்.

கிவிட்டோவா வென்ற இரண்டாவது விம்பிள்டன் மற்றும் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். முன்னதாக 2011 இல் மரியா ஷரபோவாவை வென்று இந்தப் பட்டத்தைக் கைப்பற்றினார். இந்த ஆட்டம் விம்பிள்டன் வரலாற்றில் குறுகிய நேரத்தில் 55 நிமிடங்களில் முடிந்த ஆட்டமாகும்.

பட்டம் வென்ற கிவிட்டோவாவுக்கு இலங்கை மதிப்பில் 43 கோடி ரூபாவும் இரண்டாவது இடத்தைப் பிடித்த பௌச்சர்ட்டுக்கு 21.5 கோடி ரூபாவும் பரிசாக வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.